# மத்தேயு 24

## வியாக்கியானம்

1



சகோ. பிரன்ஹாம் அவர்களின்
மேற்கோள்களிலிருந்து

# மத்தேயு 24:1

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு

---

33. இப்பொழுது நாம் படித்த இவ்வேதபாகத்தில் - இந்த அதிகாரத்தின் முதலாம் பாகத்தில், சீஷர்கள் அவரை ஒலிவமலையில் சந்தித்து, "உலகத்தின் முடிவின் அடையாளம் என்ன? உம்முடைய வருகையின் அடையாளம் என்ன? ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு தேவாலயம் எப்பொழுது இடிக்கப்படும்?"

என்னும் கேள்விகளைக் கேட்டனர். இயேசு அவர்களுக்குப் பதிலளிக்கிறார்... பாருங்கள், இந்த முதலாம் வசனம்....

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்படுகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்கு காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பின்பு அவர் ஒலிவமலையில்மேல் உட்கார்ந்திருக்கையில் சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்லவேண்டும் என்றார்கள்.

மத். 24: 1-3

34. பாருங்கள்? அவர்கள் மூன்று கேள்விகளைக் கேட்டனர். அவர் அந்த மூன்று கேள்விகளுக்கும் பதிலளிக்கிறார், "ஒரு கல்லின் மேல் ஒரு

கல்லிராததடிப்படிக்கு இடிக்கப்படும் காலம் எப்போழுது வரும்? உம்முடைய வருகையின் அடையாளம் என்ன? உலகத்தின் முடிவை குறித்தென்ன? ” அநேக சகோதரர் இவை அனைத்தையும் அவருடைய வருகையுடன் இணைக்கும் தவறைச் செய்கின்றனர். அவர் மூன்று வித்தியாசமான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்: ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடிக்கப்படும் காலம் எப்பொழுது வரும்? இவை எப்பொழுது வரும்? இவை எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகையின் அடையாளம் என்ன? உலகத்தின்

முடிவில் என்ன சம்பவிக்கும்? பாருங்கள், மூன்று வித்தியாசமான கேள்விகள். முதலில் அவர் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடிக்கப்படும். கேள்விக்கு பதிலளிக்கிறார். அதற்கு பதிலளித்து முடித்தவுடனே, அவருடைய வருகையின் அடையாளத்தைக் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கிறார். அதன் பின்பு, அவர் உலகத்தின் முடிவைப் பற்றிய கேள்விக்கு வருகிறார்.

# மத்தேயு 24:1

இயேசு தேவாலயத்தை விட்டுப்
புறப்பட்டுப்போகையில்,
அவருடைய சீஷர்கள்
தேவாலயத்தின் கட்டடங்களை
அவருக்குக் காண்பிக்க
அவரிடத்தில் வந்தார்கள்.

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 63-03-23 ஆறாம் முத்திரை

---

146 இப்பொழுது கவனியுங்கள். ஆறாம் முத்திரை வார்த்தையின் முத்திரையாகிய நியாயத்தீர்ப்பின் முத்திரையாயிருக்கிறது.

147 இப்பொழுது, இங்கே நாம் பரிசுத்த மத்தேயு 24-ம் அதிகாரத்தை படிக்க ஆரம்பிப்போம். இப்பொழுது, நான் உங்களுக்கு ஒன்றை அளிக்க விரும்புகிறேன். அதைக் கண்டுபிடிக்க, நான் வேதத்தைப்

பார்த்தேன். இப்பொழுது பரிசுத்த மத்தேயு 24-ம் அதிகாரம் 1 முதல் 3 வசனங்களைப் படிப்போம்.

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

என்றார். (இப்பொழுது மூன்றாம் வசனம்). பின்பு அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.

148 இப்பொழுது, இம்மூன்று வசனங்களுடன் நாம் தற்பொழுது நிறுத்திக் கொள்வோம். இந்த மூன்று வசனங்களும் சரியாக கி.பி. 30ம் வருடம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதி

செவ்வாய்க்கிழமையன்று நிகழ்ந்தது. முதலிரண்டு வசனங்கள் கி.பி.30 ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் தேதியன்று பகலில் நிறைவேறியது. மூன்றாம் வசனம் அதே நாள் சாயங்காலம் நிகழ்ந்தது. பாருங்கள்?

149 அவர்கள் தேவாலயத்திற்கு வருகிறார்கள். அவர்கள் இயேசுவிடம் வந்து, "இது என்ன? அதுவென்ன? இந்த ஆலயத்தைப் பாருங்கள். எவ்வளவு பிரம்மாண்டமாயிருக்கிறது? அது அற்புதமாக இல்லையா? " என்றனர்.

அதற்கு அவரோ, "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி அது இடிக்கப்பட்டுப்போகும்" என்றார்.

150 அப்பொழுது அவர் அந்த மலையின் மீது உட்கார்ந்தார். பாருங்கள், அங்கே, அங்கே அவர் பேச ஆரம்பிக்கின்றார்; அது பிற்பகலாயிருந்தது. ஆகவே அப்பொழுது அவர்கள் அங்கே அவரிடம், “சில காரியங்களைக் குறித்து நாங்கள் அறிய விரும்புகிறோம்” என்றனர்.

151 அவருடைய சீஷராகிய யூதர்கள் இங்கே இங்கே அவரை மூன்று கேள்விகள் கேட்கின்றனர் என்பதைக் கவனிக்கவும். இப்பொழுது கவனியுங்கள். முதலாவதாக, முதலாவதாக “என்ன” “என்ன... இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?

'அதாவது ஒரு கல்லின்மேல் கல்லிராதபடி இடிக்கப்படுவது.'" "உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன?" இரண்டாம் கேள்வி. "உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்ன?" பாருங்கள்? அங்கே மூன்று கேள்விகள் உள்ளன.

152 இப்பொழுது அநேகர் இம்மூன்று கேள்விகளையும் வேறோரு காலத்துடன் பொருத்தும் தவறைச் செய்கின்றனர். அவர் மூன்று கேள்விகளுக்கும் பதில் அளிக்கிறார். அவர்கள்...

153 இப்பொழுது கவனியுங்கள் இது எவ்வளவு எவ்வளவு அழகாக இருக்கிறது. பாருங்கள்? மூன்றாவது

வசனத்தின் கடைசி பகுதியைக் கவனியுங்கள். "அடையாளம் என்ன..." முதலாவதாக அவர்கள் அவரைத் தனியாக ஒலிவ மலைக்கு அழைத்தார்கள். முதல் கேள்வியாக. " இவைகள் எப்பொழுது சம்பவிக்கும் என்று எங்களுக்குச் சொல்லும்" என்று கேட்டனர். இரண்டாவது கேள்வி, "உமது வருகையின் அடையாளம் என்ன? " - மூன்றாவது கேள்வி. பாருங்கள்? அங்கே மூன்று வித்தியாசமான கேள்விகள் கேட்கப்பட்டனர். இப்பொழுது நீங்கள் வேதத்தைத் திருப்பி இக்காரியங்களைக் குறித்து இயேசு எவ்விதம் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

154 ஓ! இது மிகவும் அழகாக உள்ளது. நான். அது என்னை .. நான்-நான்-நான்-அதைப் பெறுகிறேன்... நாம் அந்த இரவு அதற்கு எந்த வார்த்தை கூறினோம்? (சபையோர், "ஊக்குவிக்கப்படுதல்" என்கின்றனர்.-ஆசி.] வெளிப்பாட்டிலிருந்து வருகின்ற ஊக்குவிக்கப்படுதல். கவனியுங்கள்.

155 இப்பொழுது நாம் இந்த புத்தகத்தின் முத்திரைகளில் உள்ள முதலாம் முத்திரைக்கு திருப்புவோம். இந்த முதல் கேள்வியை முதல் முத்திரையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

156 சபைக் காலங்களையும், மற்றவற்றையும் நாம் சரியாக ஒப்பிட்டது போல, இவ்விதம் ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு கேள்வியுடன் ஒத்துப் போகின்றதா என்று பார்ப்போம். அவ்விதம் அவை ஒத்துப்போனால், முத்திரையின் இரகசியங்கள் பூரணமாக நமக்கு வெளியாகிவிட்டன என்று அர்த்தம். கவனியுங்கள். “அவர் அவர்களுக்கு பதிலளித்தார்.” இப்பொழுது முதலாவதாக நாம் படிக்க இருப்பது. அவர் அவர் பதிலளிக்க ஆரம்பிக்கிறார். அதை இப்பொழுது நாம் முத்திரையுடன் ஒப்பிடப் போகிறோம்.

157 இப்பொழுது கவனியுங்கள். முதலாம் முத்திரை இப்பொழுது வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரம் 1 மற்றும் 2-ம் வசனங்களில் உள்ளது. இப்பொழுது நாம் வெளிப்படுத்தல் 6:1-2-ஐப் படிப்போம்.

ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன். இப்பொழுது நான்கு ஜீவங்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம் போன்ற சத்தமாய்ச் சொல்லக் கேட்டேன்.

நான் பார்த்தபோது. இதோ, ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன்

வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங்க் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.

158 இந்த நபர் யாரென்று நாம் பார்த்தோம்? [சபையோர், "அந்திக்கிறிஸ்து" என்கின்றனர்.--ஆசி.) அந்திக்கிறிஸ்து. இப்பொழுது மத்தேயு 24-ம் அதிகாரத்திற்கு வருவோம், 4மற்றும் 5-ம் வசனம்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

ஏனென்னில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

159 அதைப் பாருங்கள்? அந்திக்கிறிஸ்து, அதுதான் உங்கள் முத்திரை. பாருங்கள்? பாருங்கள்? அவர் அதைக் குறித்து இங்கு பேசியுள்ளார். முத்திரை திறக்கப்படும்போது இங்கே அது வெளிப்படுகின்றது. அதுவே வெளிப்படுகின்றது, மிகவும் பரிபூரணமாகப் பொருந்துகின்றது.

160 இப்பொழுது இரண்டாம் முத்திரை, மத்தேயு 24:6, வெளிப்படுத்தல் 6:3-4. மத்தேயு

24:6 ஐ இப்பொழுது கவனிப்போம். அது என்ன சொல்லுகிறதென்று இப்பொழுது நாம் பார்ப்போம்.

யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்: இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே: ஆனாலும் முடிவு உடனே வராது.

161 சரி. இரண்டாம் முத்திரையை எடுத்துக் கொள்வோம் வெளிப்படுத்தல் 6:3-4. அவர் என்ன சொல்கிறார் என்பதை இப்பொழுது கவனியுங்கள்.

அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்து போடும்படியான் அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

162 பரிபூரணமாக, சரியாகப் பொருந்துகின்றது. ஓ! வேத வாக்கியங்களுக்கு வேத வாக்கியங்களே பதிலுரைப்பதை நான் விரும்புகிறேன். நீங்களும் அதை விரும்புகிறீர்கள் அல்லவா? (சபையோர், "ஆமென்" என்று கூறுகின்றனர்.--ஆசி.] பரிசுத்த ஆவியானவர் தாமே இவையாவையும் எழுதினார். ஆனால் அவர் அதை வெளிப்படுத்தித்தரக் கூடியவராயிருக்கிறார்.

163 இப்பொழுது நாம் மூன்றாம் முத்திரையைக் கவனிப்போம். அப்பொழுது இது பஞ்சமாய் உள்ளது. இப்பொழுது

மத்தேயு 24:78. நாம் மத்தேயுவில் 7:8 வசனங்களை எடுப்போமாக.

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜயமும் எழும்பும்; பஞ்சங்களும் கொள்ளிய நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். *இவையெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.*

164 பாருங்கள், நாம் இப்பொழுது சரியாக வந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரம். இப்பொழுது நாம் மூன்றாவது முத்திரையை திறக்கப்போகிறோம்.

அது வெளிப்படுத்தல் 6:5-6ல் காணப்படுகின்றது.

அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனாது: நீ வந்து பார் என்று சொல்லக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன். அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தாராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு

ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

165 பஞ்சம்! பாருங்கள், மூன்றாம் முத்திரையில் இயேசு சொன்னதே கூறப்பட்டுள்ளது.

166 சரி. நான்காம் முத்திரை - "கொள்ளை நோய்களும்" "மரணமும்". மத்தேயு 24. நாம் 8வது வசனத்தை, 7வது, 8வது வசனங்களைப் படிப்போம். அது நான்காம் முத்திரையின் பேரில் உள்ளது என்று நான் நினைக்கிறேன். நான் இங்கு குறித்து வைத்திருக்கிறேன். சரி.

167 இப்பொழுது, நான் இங்கு என்ன வாஞ்சித்தேன்? நான்

ஏதாவது தவறாக வாசித்தேனா? ஆம். நான் அதைக் குறித்து வைத்துள்ளேன். ஆம். நாம் அதை அங்கே காணலாம். இப்பொழுது நாம் அதைத் தொடர்ந்து வாசிக்கப்போகிறோம். இப்பொழுது நாம் பார்ப்போம். சரி ஐயா.

168 இப்பொழுது. நான்காவது முத்திரையைக் குறித்து நாம் 7ம் வசனத்தில் தொடங்கி வாசிப்போம். வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரம் 7-8 வசனங்களில் உள்ளது.

169 இப்பொழுது. நாம் மத்தேயு 24:7,8 வசனங்களைப் பார்ப்போம். சரி. இப்பொழுது.

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

170 நாம் அங்கே வாசித்தபடி இப்பொழுது நான்காவது முத்திரை... நான்காம் முத்திரை 7, 8-ல் துவங்கியது. இப்பொழுது இது மற்றது...

அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ மங்கின

நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்;...

171 இப்பொழுது பொறுத்துக் கொள்ளுங்கள். நான் இதைத் தவறாக எழுதி வைத்துள்ளேன். ஆம், ஆம், இப்பொழுது சற்று ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது 7-ம் 8-ம் வசனங்கள்.

172 இப்பொழுது மத்தேயு 24:7-8 வசனங்களை நாம் பார்ப்போம். நாம் இப்பொழுது பார்ப்போம். நாம் அதைப் புரிந்து கொள்ளலாம், அது மூன்றாவது முத்திரை அல்லவா? (சபையோர், "ஆமென்" என்கின்றனர்.-ஆசி.]மத்தேயு 24:7-8 வசனங்கள்.

என்னே மன்னிக்கவும். இப்பொழுது அது மழையைக் குறித்து... அல்லது பஞ்சம் என்பதைத் திறந்து காண்பிக்கிறது. சரி.

173 இப்பொழுது, “பஞ்சம்” “மரணம்” ஆம். ஐயா, நாம் இப்பொழுது 7-8 வசனங்களுக்குச் செல்கிறோம். இப்பொழுது அது நான்காவது முத்திரை எங்குள்ளது என்று நாம் பார்ப்போம். "அவர் நான்காம்நான்காம் முத்திரை...” ஆம், அது மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் சவாரி செய்பவன், "மரணம்” ஆகும். பாருங்கள்.

நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

174 இப்பொழுது, பாருங்கள்- அது “மரணம்” ஆகும்.

175 இப்பொழுது ஐந்தாம் முத்திரை -மத்தேயு 24:9-13. இதைச் சரியாகக் குறித்து

வைத்துள்ளேனா என்று நான் மறுபடியும் பார்க்கட்டும். பாருங்கள்?

அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்: (அங்கே பாருங்கள்) என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

அப்பொழுது, அநேகர் இடறலடைந்து ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

*முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.*

176 இப்பொழுது நாம் ஐந்தாவது முத்திரையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், சென்ற இரவு நாம் ஐந்தாம் முத்திரையைக் குறித்து சிந்தித்தோம். "அவர்கள் உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து உங்களைக் கொலை செய்வார்கள்." ஒருவரையொருவர்

காட்டிக் கொடுப்பார்கள் போன்றவை.

177 இப்பொழுது ஐந்தாம் முத்திரையைக் கவனியுங்கள். வெளிப்படுத்தல் 6:9-11. இப்பொழுது அந்த ஒன்றை நாம் வெளிப்படுத்தல் 6:9 to 11-ல் பார்ப்போம்.

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை

நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

178 இப்பொழுது ஐந்தம் முத்திரையில், கொலை செய்யப்பட்டுவர்களை நாம் காண்கிறோம், நாம் இங்கே காண்கிறோம்.

179 மத்தேயு 24:9-13 வசனங்கள் அதையே உரைக்கின்றன. அது கொலை செய்யப்பட்டவர்கள் என்பதையும் கூட நாம் கண்டோம். "உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து உங்களைக்

கொலை செய்வார்கள்," போன்றவை. பாருங்கள், அதே முத்திரை திறக்கப்படுகின்றது.

180 இப்பொழுது நாம் ஆறாம் முத்திரைக்கு வருவோம். அதையே நாம் இப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். மத்தேயு 24:2930. 24-ம் அதிகாரம் 29 மற்றும் 30-ம் வசனங்களைப் பார்ப்போம். இதோ நாம் படிப்போம்.

இப்பொழுது, இதனுடன் நாம் வெளிப்படுத்தல் 6:12-17ஐயும் படிக்கப் போகிறோம்.

181 இதைத் தான் நாம் ஆரம்பத்தில் படித்தோம்:

கேளுங்கள். இதுதான் இயேசு மத்தேயு 24:29-30 வசனங்களில் கூறியுள்ளார்.

அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடனே...

182 என்ன? அப்பொழுது... இந்த உபத்திரவ காலம், இந்த தற்காலிக உபத்திரவ காலம் (amateur tribulation) இங்கே அவர்கள் அதனுள் பிரவேசித்தனர். பாருங்கள்.

சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது

மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல

கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

183 இப்பொழுது நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் ஆறாம் முத்திரையை இங்கே வெளிப்படுத்துதலில் படிப்போம்.

அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்: இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக்

கம்பளியைப்போலக் கறுத்தது; (பாருங்கள்?) சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது

பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

வானமும் (வானங்களும்) சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும் சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர்

யாவரும் பர்வதங்களின் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி; நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக் கூடும் என்றார்கள்.

184 எவ்வளவு பரிபூரணமாகப் பொருந்துகின்றது. இயேசு மத்தேயு

24:29-ல் என்ன சொன்னார் என்பதை திரும்பிப் பார்த்து கவனியுங்கள். கவனியுங்கள். எய்க்மனின் விவகாரம் போன்றவை.

அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். இப்பொழுது கவனியுங்கள்...

அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின்

மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.

185 பாருங்கள். இயேசு மத்தேயு 24-ம் அதிகாரத்தில் கூறியதும், ஆறாம் முத்திரை திறக்கப்பட்டபோது இங்கே வெளிப்படுத்துபவன் கண்டதும் ஒன்றாகவே இருக்கிறது. இயேசு

உபத்திரவ காலத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார்.-ஆசி.] புரிகிறதா?

186 அவர்கள் இயேசுவை நோக்கி, இவைகள் எப்பொழுதாவது சம்பவிக்குமென்றும், தேவலாயம் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதவடி எப்பொழுது இடிக்கப்படுமென்றும் கேட்கின்றனர். அதற்கு அவர் விடையளித்தார். அடுத்தபடியாக அவர் கேட்பார். அங்கே இரத்த சாட்சிகளின் காலம் வருகின்றது. இது நடக்கும்போது, அந்திக்கிறிஸ்து எப்பொழுது எழும்புவானென்றும்,

அவன் எப்பொழுது தேவாலயத்தில் உட்காருவானென்றும் கூறினார். 187 தானியேல் புஸ்தகத்தில், வரப்போகும் அதிபதியைக் குறித்து சொல்லப்பட்டிருக்கும் பாகத்தை நாம் இப்பொழுது படித்தால் நலமாயிருக்கும். வேதத்தைப் படித்திருக்கும் உங்கள் அனைவருக்கும் அது தெரியும், அவன் என்ன செய்வான்? அவன் அன்றாட பலிகளை எடுத்துப் போடுவான். அச்சமயத்தில் என்னவெல்லாம் நடைபெறும் என்பது அதில் எழுதப்பட்டிருக்கிறது...

188 இயேசுங்கூட அதை வலியுறுத்தியுள்ளார். அவர்

“ பாழாக்கும் அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது...” என்று கூறியுள்ளார். (சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார்.- ஆசி.] அது என்ன? தேவாலயம் சுட்டெரிக்கப்பட்ட பின்னர் அந்தவிடத்தில் ஒமரின் மசூதி நின்றது. அவர் மேலும், "யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும்

எடுப்பதற்கு இறங்காதிருககக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களே எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன். ஏனெனில் மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்” என்று கூறினார். நீங்கள் பாருங்கள்? இவையாவும் நிறைவேறும் ஆறாம் முத்திரை திறக்கப்படும் இச்சமயத்தில் இது வரையிலும் அசைந்து வந்த இது சரியென நிரூபிக்கப்படுகின்றது.

189 இயேசு ஏழாம் முத்திரையைக் குறித்த போதகத்தை ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். நாளை இரவு ஏழாம் முத்திரையைப் பற்றி

சிந்திக்கப் போகிறோம். அது இங்கேயும் இல்லை. கவனியுங்கள், அதன்பின் அவர் உடனே உவமைகளைச் சொல்லத் தொடங்கி விடுகிறார். அவ்வாறே யோவானும், ஏழாம் முத்திரையை விவரிக்காமல் விட்டுவிடுகிறான். ஏழாவது, கடைசியான ஏழாவது முத்திரை ஒரு மகத்தான காரியமாய் இருக்கும். பாருங்கள்? அது இங்கு எழுதப்படவும் இல்லை. இயேசுவும் யோவானும், ஏழாவது முத்திரையை விட்டு விட்டனர். “பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதல் உண்டாயிற்று” என்றும் மாத்திரம் அவன் கூறுகிறான். ஆனால் இயேசு அதைக் குறித்து ஒரு

வார்த்தையுடங்கூட சொல்லவில்லை.

190 இப்பொழுது கவனியுங்கள். வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில், ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதைக் குறித்துச் சொல்லப் பட்டிருக்கிறது. ஐந்தாம் முத்திரையைப் போன்றே ஆறாம் முத்திரை உடைக்கப்படும் போது அதை அறிவிக்க அங்கு ஒரு ஜீவன் இல்லை. ஏன்? இவை சுவிசேஷ காலம் முடிவு பெற்ற பின்னர், உபத்திரவ காலத்தில் சம்பவிக்கின்றன. இந்த ஆறாம் முத்திரை உபத்திரவ காலத்தை வர்ணிக்கிறது. மணவாட்டி அப்பொழுது ஏற்கனவே

எடுக்கப்பட்டிருப்பாள். பாருங்கள்? அதை அறிவிக்க ஒரு ஜீவன் அங்கில்லை. அது வெறும்... இப்பொழுது அச்சமயம் தேவன் சபையுடன் ஈடுபடுவதில்லை. ஏனெனில் அது அப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும்.

# மத்தேயு 24:2

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## செய்தி: 57-04-17 கர்த்தருடைய இரண்டாம் வருகை

24. இயேசு அவருடைய சீஷர்கள் ஒரு இடத்தை அடைந்த போது, அவர்கள் மாம்சபிரகாரமான, இல்லை பூமியின் இயற்கை யான காரியங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது நாம் இங்கே ஒரு சில நிமிடங்கள் அப்படியே நிறுத்த விரும்புகிறோம். எப்பொழுதும் நம்மை தூரமாக இழுப்பது மாம்ச மானவையாக இருப்பதில்லை. ஆனால் சில

நேரங்களில் இயற்கையான காரியங்களே நம்மை தூரமாய் இழுக்கும். இயேசு வினுடைய ஊழியக்காரர்கள் இல்லை, அவருடைய சீஷர்கள் அவருக்கு எருசலேம் நகர தேவாலயத்தை, மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் தம்முடைய ஷெக்கினா மகிமையில் பிரத்தி யட்சமாயிருந்த அந்த மகத்தான தேவாலயத்தைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அவரிடத்தில் அதில் எவ்வளவு நல்ல கற்கள் பதிக்கப்பட்டிருந்தன என்பதைக் குறித்தும், உலகத்தின் அநேக இடங்களில் வெட்டப்பட்ட இந்தக் கற்களை எப்படியாய் மகத்தானத்

தேவனுடைய மதிநுட்பம் அவைகளை ஒன்று சேர்த்தது என்றும் கூறினர். அதனை நாற்பது வருடங்களாகக் கட்டுகையில் இரம்பம் அல்லது சுத்தியின் சத்தம்கூட கேட்கப்படவில்லையாம். அது மிகவும் மதிநுட்பத்திறனோடு ஒன்று சேர்க்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் எப்படியாய் தேவன் கேரூபீன்கள் மேல் வந்திறங்கினார். அது அவருடைய ஷெக்கினா மகிமையைக் காண்பித்தது. எனவே இந்த மகத்தான சபையில் அவர்கள் எவ்வளவு மகத்தான நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

25. அப்பொழுது இயேசு அவர்களிடத்தில், "இந்தக்

காரியங்களையெல்லாம் பார்க்க வேண்டாம்” என்று கூறினார். அதே சமயத்தில் அது ஒரு பரிசுத்த ஸ்தலமாயிருந்தது. அது ஒரு நல்ல ஸ்தலமாயிருந்தது. அது கர்த்தரின் வாசஸ்தல வீடாய், ஒரு ஸ்தலமாய் இருந்தது. ஆனால் இயேசு, “இந்தக் காரியங் களைப் பார்க்காதீர்கள். இதைப் பார்க்கிலும் மிகவும் பெரிதான ஒரு காரியத்தை உங்களுக்கு கூறும்படி நான் வைத்துள்ளேன். ஏனென்றால் அந்த நேரம் வந்து கொண்டிருக்கிறது” என்றார். மேலும் அவர், "அது ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்” என்றார்.

26. நாம் எவ்வளவுதான் நம்முடைய மாம்சப்பிரகாரமான சரீரத்தைக் குறித்து அக்கறை எடுத்துக் கொள்ள முயற்சித்தாலும் அது முக்கியமல்ல. நாம் நம்முடைய ஸ்தாபனத்திற்கே எவ்வளவு கடினமாக உழைத்தாலும், நம்முடைய- நம்முடைய சபையின் ஒழுங்குகளுக்காகச் சபையில் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் அது முக்கியமல்ல. ஆனால் இந்த எல்லா காரியங்களும் மறைந்து ஒழிந்துபோகும் ஒரு நேரம் வந்து கொண்டிருக்கிறது.

27. இயேசு அதை அவர்களுக்கு கூறத்துவங்கினபோது, அவர்கள், ''உலகத்தின் முடிவைக் குறித்த

வருகையின் அடையாளம் என்னவாயிருக்கும்?" என்று கேட்டனர்.

28. அப்பொழுது இயேசு அவர்களுக்கு, "ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நேரம் உண்டாகும். நீங்கள் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்தி களையும் கேள்விப்படுவீர்கள். கொள்ளைநோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்" என்று கூறத் துவங்கினார்.

29. அன்றொருநாள் கலிபோர்னியாவில் உள்ள

ஒக்லேன்ட் எனுமிடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அங்கே இருந்தது எங்களுக்கு ஒரு சிலாக்கியமாயிருந்தது. மனைவி முதன்முறையாக பூமியதிர்ச்சியின்போது இருந்த சமயமாயிருந்தது. நான் சிகை அலங்காரக் கடையில் அமர்ந்து கொண்டிருந்தேன். நான் .... அந்த அறையோ அப்படியே கொஞ்சம் அசைந்தது. உடனே வானொலியில், "பூமியதிர்ச்சி உண்டானது" என்று துரிதமாக அறிவிக்கப்பட்டது. அப்பொழுது, "அவர்கள் சுமார் எட்டு நிமிடங்கள் ஒருவரையொருவர் நோக்கிப்

பார்த்துக்கொண்டிருந்தனர்" என்றும் கூறினர்.

அப்பொழுது நான், "ஓ, இதுவே கடைசியான ஒன்றா யிருக்குமா" என்று எண்ணினேன்.

30. நான் சிகை அலங்காரக் கடையிலிருந்து துரிதமாகப் புறப்பட்டு, வீதியில் நின்று கொண்டிருந்த என்னுடைய மனைவி யைச் சந்தித்து, பின்னர் எங்களுடைய அன்பான சிறுவர்களுக்கு சில சிறு வண்ணப்பட அட்டைகளை அனுப்பும்படி வாங்குவதற்கு ஒரு சிறு மருந்துக் கடைக்குள்ளாக நடந்து சென்றோம். நாங்கள்

அங்கிருந்தபோது, ஒன்றுமே புரியாத வகையில், ஒரு மனிதன் எப்போதுமே உணர்ந்திராத வினோதமான உணர்வுகள் உண்டாக, முழு பூமியும் அசையத் துவங்கியது. கண்ணாடிக் குப்பிகள் அலமாரியிலிருந்து விழத்துவங்கின. புகைப்போக்கி குழாய்கள் கட்டிடத்திலிருந்து விழத் துவங்கி வீதிக்குச் சென்று உடைந்து, வழிந்தோடின. சுவர்களிலிருந்து பூசப்பட்டிருந்த அரைச்சாந்து விழுந்த காரணத்தினால் ஜனங்கள் கூக்குரலிட்டுக் கொண்டு கதறினர். முப்பது, நாற்பது அடுக்கு மாடிகளைக் கொண்ட பெரிய கட்டிடங்கள் ஒன்றோடொன்று ஆடி,

புகை எழும்புமளவிற்கும் மோதிக் கொண்டு, காரை பூசப்பட்டதிலிருந்து தூசியானது பெரிய காளான்களைப் போல எழும்பினது. ஜனங்களோ கூச்சலிட்டுக் கொண்டே ஓடத் துவங்கினர். அப்பொழுது நான், "அது சர்வவல்லமையுள்ள தேவனுடைய விரலாய் உள்ளது என்றும், 'அது சுவற்றின் மேல் எழுதின கையெழுத்து" என்றும் கூறினேன்.

31. இயேசு, ''பூமியதிர்ச்சி பல இடங்களில் உண்டாவதைக் குறித்து நீங்கள் கேள்விப்படுவீர்கள்" என்றார். பூமியானது நெடுஞ்சாலையில் நீண்ட தூரத்திற்கு

சுமார் ஐந்து அடி அகலத்திற்கு பிளந்து கொண்டு, நூற்றுக்கணக்கான அடிகள் பூமிக்குள் சென்றுவிட்டது. ஒரு இடத்தில் நெடுஞ்சாலையே முழுமையாக உள்ளே போய்விட்டது. அது பிளவுண்டு திறந்து கொண்டதை நான் எண்ணிப் பார்த்தபோது, அது, "பல இடங்களில் பூமியதிர்ச்சி உண்டாகும்" என்று கூறின சர்வ வல்லமையுள்ள தேவனின் விரல் என்பதை ஏறக்குறைய அப்படியே என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

32. அந்நாளின்போதே எட்டு பல்வேறுபட்ட இடங்களில் நிகழ்ந்த பூமியதிர்ச்சிகள் அந்த நகரத்தையே அசைத்திருந்தன. அதன் பின்னரோ,

மதுபானக்கடைகள் எப்போதும் போல திறந்தே இருந்தன. குடிகாரர்கள் வீதிகளில் திரளாய் மொய்த்துக் கொண்டிருந்தனர். ஸ்திரீகளோ வீதியில் அரை நிர்வாண ஆடையை உடுத்திக் கொண்டு நடந்து சென்றனர். மற்றும் ஒவ்வொரு காரியமும் ஒன்றுமே எப்போதும் சம்பவித் திராதது போன்று காணப்பட்டது. இந்தத் தேசத்தை அசைக்கும் படி என்ன சம்பவிக்கும் என்று நான் அறியாத அளவிற்கு ஜனங்கள் அவ்வளவாய் உலகியல் வாழ்வில் சிக்குண்டுள்ளனர். அவர்கள் அதிக அக்கறையற்றவர்களாயிருப்பது போன்று தோன்றுகிறது. அவர்கள்

கவனிக்கிறதில்லை. ஒரு மனிதனும்கூட ஒரு கருத்தைக் கூறினான். நான் என்னுடைய சொந்தக் கண்களினால் அவன் கூறுவதைக் கேட்டேன். அவன், "நான் என்ன செய்தேன் என்று நீங்கள் பார்த்தீர்களா? நான் என்னுடைய முஷ்டியை அசைத்தேன். எனவே நான் ஒரு மேம்பட்ட மனிதன்" என்றான்.

33. அதைப்போன்ற தூஷணத்தை நான் இங்கு நம்முடைய சொந்த பட்டிணத்தில் இருந்தபோதும்கூட அந்தளவு அதைக் குறித்து ஒருபோதும் எண்ணிப் பார்த்ததே இல்லை. நான் நேற்று மாலை ஜார்ஜ் டவுனுக்கு

நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தேன். நீங்கள் அவ்வாறு செல்லும் போது வரப்போகும் புதிய நெடுஞ்சாலையில் இணையும் முன்னர் நீங்கள் இங்கே பிரிந்து செல்லும் பல பாதைகளை கடந்து செல்ல வேண்டும். அவ்வாறு செல்லுகையில் அங்கே ஒரு பெரிய அடையாளப்பலகை ஒட்டப்பட்டிருந்தது. அதில், "அவர் உயிர்த்தெழுந்து ஜீவனோடிருக்கிறார்" என்று எழுதப்பட்டிருந்தது. அதற்கு அடுத்த அடையாளம், அவை இரண்டு மாத்திரமே இருந்தன. அதிலோ, "எங்கே பட்வைஸர் என்று முத்திரையிடப் பட்ட மதுபானம்

உள்ளதோ, அங்கு ஜீவன் உண்டு" என்று எழுதப்பட்டிருந்தது.

34. அப்பொழுது நான், "எத்தகைய தூஷணம்" என்பதை எண்ணிப் பார்த்தேன். அங்கே அது அப்படித்தான் இருந்தது. வேதம், "கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னர் மனுஷர்கள் தூஷிக்கிறவர்களாயும், தேவபக்தியற்ற தங்களுடைய சொந்த இச்சையில் நடக்கிறவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்று உரைத்துள்ளது. எப்படியாய் உலகம் அப்படிப்பட்ட ஒரு வஞ்சகத்திற்குள் ஆகியிருக்கிறது.

35. அண்மையில் இந்தியாவில் உள்ள பம்பாயில் பில்லியும் (என் மகன்) நானும் அங்கே ஒரு மகத்தான கூட்டத்தில் இருந்த போது, இலட்சக்கணக்கான இந்துக்கள் தங்களுடைய ஜீவியத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தனர். அப்பொழுது அங்கே ஒரு பெரிய எச்சரிப்பு உண்டானது. நீங்கள் இயற்கை யின் அறிவுத்திறனைக் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சடுதியாக யாதொரு காரணமும் அறியப்படா திருக்கையில், அந்த நகரத்தில் உள்ள சிறு பறவைகள் யாவுமே அந்தத் தேசத்தை விட்டு செல்லத்

துவங்கின. பறவைகள் திரள் திரளாக அந்தத் தேசத்தை விட்டுப் பறந்து சென்றன. அப்பொழுது அவர்கள் எல்லா கால்நடைகளையும், ஆடுகளையும் மாடுகளையும் கவனிக்கத் துவங்கினர். ஆனால் இந்தியாவில் அவர்களுடைய வேலி அமைப்புகள் நம்முடைய வேலி அமைப்பு களைப் போலிருக்கவில்லை. அவைகள் மரக்கட்டைகளினாலான வேலி அமைப்புகளாயிராமல், அவைகள் பெரிய கற்களைக் கொண்டு உயரமாய் கட்டப்பட்டிருந்தன. அப்பொழுது எல்லா கால்நடைகளும் மதிற்சுவர்களை விட்டு தூரமாயும், கட்டிடங் களை

விட்டு தூரமாயும் செல்லத் துவங்கி, வெளியே வயல் வெளிக்கு மத்தியில் போய் வயல்வெளியின் நடுவில் சுற்றி நிற்கத் துவங்கின. அதன்பின்னர் திடீரென்று ஒரு பெரிய பூமியதிர்ச்சி தாக்க மதிற்சுவர்கள், மரங்கள், கற்பாறைகள் குலுங்கி இடிந்து விழுந்து, அதனுடைய துண்டுகள் பறந்தன. ஆனால் அதன்பின்னரும் பறவைகள் திரும்பி வராமல், கால் நடைகளும் வயல் வெளியின் நடுவிலேயே நின்றிருந்தன. ஆனால் மனிதனோ எல்லாம் சரியாகிவிட்டது என்று எண்ணி திரும்பிச் சென்றான். அப்பொழுது அதற்கு அடுத்த நாள் மற்றொரு

பூமியதிர்ச்சி உண்டாகி ஆட, அதிகமான கட்டிடங்கள் இடிந்து விழுந்து, அதனுடைய உடைந்த பாகங்கள் பறந்தன. ஆனால் மூன்றாம் நாள் கால்நடைகள் மதிற்சுவர்களண்டைக்கும், பறவைகள் நகரத்திற்கும் திரும்பின் .

36. ஓ, அடைக்கலான் குருவிகளை போஷிக்கிறவர், பேழைக்குள் தம்முடைய சிறிய சிருஷ்டிகளைக் கொண்டு வந்தவர் இன்னமும் ஜீவிக்கிறார், ராஜரீகம் பண்ணுகிறார். தேவன் தம்முடைய சாயலில் சிருஷ்டித்த மனிதனைப் பார்க்கிலும் அவைகள் தேவனைக் குறித்து அதிக ஞானமுடையவைகளாக

இருப்பதுபோன்று தென்படுகின்றன. மனிதனோ தூஷிக்கிறான். பூமியின் சிறு சிருஷ்டிகளுக்குத் தேவன் அவைகளுக்காக வழியை அருளுகிறபடியால் அவைகள் அந்தப் பெரிய மதிற் சுவர்களிலிருந்து தங்களுடைய வழியில் சென்றுவிட்டன, இல்லையென்றால் அவைகள் கொல்லப்பட்டிருக்கும். பறவை களோ கற்பாறைகள் முன்னும் பின்னும் மோதி உடைந்த வெடி சத்தத்தில் சிக்கிக் கூழாகிவிட்டிருக்கும்.

37. அவருடைய வருகையின் அடையாளங்களாயிற்றே! ஓ, இது நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிற ஒரு

மகத்தான நாளாயிருக்கிறது. பல இடங்களில் பூமியதிர்ச்சிகளும், கொள்ளைநோயும் உண்டாகும் என்று அந்த எல்லாக் காரியங்களைக் குறித்தும் இயேசுவானவர் இங்கே உரைத்துவிட்டார். என்னுடைய வழியில் நான் அதைக் காணும்போது, கர்த்தருடைய வருகையைத் தவிர வேறொன்றுமே விடப்பட்டிருப்பதை நான் காணவில்லை. அது சமீபித்திருக்கிறது.

38. இயேசுவானவர் தம்முடைய ஜனங்களிடத்தில் தம்முடைய சொற்பொழிவில்கூட .... அவர், "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்;

அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது, காலம் சமீபமாய் இருக்கிறது என்று அறியுங்கள்" என்றார்.

39. அத்திமரம் என்ன வாயிருந்தது என்பதைக் கவனியுங்கள். அத்திமரம் எப்பொழுதுமே யூத தேசமாய் இருந்து வருகிறது. அவர், "அத்திமரத்தை " மாத்திரம் கூறாமல், "மற்ற மரங்களையும்" கூறினார். "அத்திமரமும் மற்ற எல்லா மரங்களும் தங்களுடைய துளிரை விடும்போது", இப்பொழுது அவர்

அத்திமரத்தைக் குறித்து மாத்திரம் பேசாமல், மற்ற மரங்களையும் குறித்துப் பேசினார்.

40. இப்பொழுது அது தன்னுடைய துளிரை விடும்போது, நாம் சற்று கவனிப்போமாக. நாம் கடந்த சில ஆண்டுகளைப் பார்க்கிலும் மிகவும் விசேஷித்த ஒரு நேரத்தில் ஜீவித்து வருகிறோம். அப்போஸ்தலர்களின் நாட்கள் முதற்கொண்டே ........ அப்பொழுதிலிருந்தே எப்பொழுதுமே உண்டாயிருந்திராத மகத்தான எழுப்புதல்களில் ஒன்றை புறஜாதி சபையானது உடையதாயிருந் து வருகிறது. ஓ, புறஜாதி சபைக்கு அப்பொழுது

எழுப்புதல் உண்டாயிருக்கவில்லை. யூத சபையே எழுப்புதலை உடையதாயிருந்தது. ஆனால் புறஜாதி சபையோ கடந்த பத்து அல்லது பன்னிரண்டு வருடங்களாக மகத்தான எழுப்புதலின் சரித்திரமாயிருந்து வருகிறது.

41. நாம் மார்டின் லூத்தருடைய எழுப்புதலைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆம் ஐயா, அது மகத்தான ஒன்றாய் இருந்தது. ஆனால் அது ஜெர்மனியில் மாத்திரமே அவ்வாறு இருந்தது. நாம் இங்கிலாந்தில் இருந்த வெஸ்லியின் எழுப்புதலைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அது இங்குப் பரவி மற்றும் ஒருசில

பிரிட்டன் நாட்டின் தீவுகளில் பரவியது. ஆனாலும் அதிக அளவில் பலனளிக்கவே இல்லை. ஆனால் இந்நாளிலோ, இப்பொழுது சம்பவித்துக் கொண்டிருக்கிற எழுப்புதலோ இயற்கைக்கு மேம்பட்டதாய், எல்லையற்ற சமுத்திரத்திலிருந்து சமுத்திரம் வரைக்கும் முற்றிலுமாய் முழுமையாய்ப் பரவி, உலகளாவிய அளவில், மகத்தான வானொலியினூடாகவும், நாளிதழினூடாகவும், வெளியே சென்ற சுவிசேஷகர்களினூடாகவும், மனிதரால் ஆதரவு அளிக்கப்படாமலேயே இலட்சக்கணக்கான

(ஆத்துமாக்களை) தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிறக்க வைத்திருக்கிற ஒரு எழுப்புதலைக் கொண்டு வந்துள்ளதே.

42. கர்த்தர் எனக்கு அளித்திருந்த என்னுடைய சொந்த எளிய ஆதரவற்ற ஊழியத்திலேயே இலட்சக்கணக்கான ஆத்துமாக்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு வந்துள்ளதை நான் கண்டிருக்கிறேன். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். மற்றவர்கள் இந்த மகத்தான ஊழியங்களைக் கொண்டு, அவர்கள் வானொலியில் பரப்பி இலட்சக்கணக்கானவரிடத்தில் தொடர்பு கொள்கின்றனர்.

எழுப்புதல் அக்கினிகள் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மலையின் மேலும் எரிந்துள்ளது. நடைமுறையில் நான் ..... ஏறக்குறையப் பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே ..... நான் ..... நாம் எழுப்பதலை துவக்கினோம். நாம் கடைசிக் காலத்தில் இருக்கிறோம்.

43. இப்பொழுது கவனியுங்கள். அதற்கு சற்று முன்பு அப்பொழுதே அவர், ''புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" என்று இங்கே தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். முகமதியர்கள் அதைக் கைப்பற்றியுள்ளனர். நாம் அதை அறிந்துள்ளோம்.

இஸ்மவேலும், ஈசாக்கும் எப்படி இஸ்ரவேலரில் ஒருவரையொருவர் கழுத்தை நெறித்துக் கொண்டிருப்பார்கள் என்று முன்னுரைக்கப்பட்டுள்ள தோ அவ்வாறே அவர்கள் இருப்பதைக் குறித்த ஆபத்தான நிலைமையை இன்றிரவு நீங்கள் நோக்கிப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் எருசலேமிலே எந்த யூதனுமே இல்லாதிருந்தனர்.

44. இப்பொழுது இயேசு, "நீங்கள் அத்திமரம் துளிர்விடு கிறதைக் காணும்போது" என்று கூறுகிறார். இப்பொழுது, யூதர்கள்

உலகம் முழுவதிலும் சிதறடிக்கப்பட்டு, அதிக எண்ணிக்கைக் கொண்டவர்களாக, இலட்சக்கணக்கானோர் ஜெர்மனியிலும், இத்தாலியிலும், ஐக்கிய நாடுகளிலும் மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து வருகின்றனர். தேவன், அவர் ஆரம்ப நாட்களில் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதுபோல, அவர் முசோலினியினுடைய இருதயத்தை யூதர்களின் மேல் கடினப்படுத்தினார். அப்பொழுது யூதர்கள் இத்தாலியிலிருந்து வெளியே விரட்டப்பட்டனர். அவர் ஹிட்லருடைய இருதயத்தை கடினப்படுத்தினார். அப்பொழுது

அவர்கள் ஜெர்மானியிலிருந்து வெளியே விரட்டப்பட்டனர். அவர் ஸ்டாலினுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார். அப்பொழுது அவர்கள் ரஷ்யாவிலிருந்து வெளியே விரட்டப்பட்டனர்.

45. ஐக்கிய நாடுகளாகிய நாம் அரபியர்களின் பட்சத்தில் சார்ந்து கொண்டோம் என்று செய்தித்தாள் பிரசுரித்துள்ளதை கவனித்தீர்களா? ஓ, சகோதரனே, சுவற்றின் மேல் கையெழுத்துள்ளதே! தேவனோ, ''இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான், இஸ்ரவேலை சபிக்கிறவன் சபிக்கப்படுவான்" என்று கூறினாரே.

46. இப்பொழுது நான் ஒரு திரைப்படத்தை வீட்டில் வைத்திருக்கிறேன், இல்லை அது அந்த நேரத்தில் வாடகைக்கு வாங்கப்பட்டது என்றே நான் நினைக்கிறேன். "அது நள்ளிரவிற்கு முன்னர் மூன்று நிமிடங்கள்" என்று விஞ்ஞானிகளால் பெயரிடப்பட்டது. விஞ்ஞான உலகமோ, "நள்ளிரவிற்கு மூன்று நிமிடங்கள் ஆகும் அளவிற்கு நேரம் கடந்துவிட்டது" என்று கூறியுள்ளது. அவர்கள் ஜலவாயு (Hydrogen) அல்லது பிராண வாயு, (Oxygen) அணுசக்தி மற்றும் அந்த மகத்தான சக்தி வாய்ந்தவைகளை பயன்படுத்தி ஐந்தே நிமிடங்களில்

முழுமையாக அழித்து ஒழிக்கக்கூடியவைகளைக் கண்டுபிடித்தபோது, அவர்கள் அதை நள்ளிரவிற்கு முன் ஒரு நிமிடம் என்றாகுமளவிற்கு குறைத்துவிட்டனர் என்றே நான் கருதுகிறேன். இன்றிரவே அவர்களால் வட அமெரிக்காவின் முழு கண்டத்திலும் முப்பதே நிமிடங்களில் ஒரு நபர்கூட உயிரோடிராதபடிக்கு செய்யக்கூடும். அது நம்மை வெறுக்கிற ஒரு கூட்ட மத நம்பிக்கையற்றவர்களின் கரங்களில் இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமின்றி நாம் எல்லா இடத்தைச் சுற்றிலும் அகன்ற படகுகளையும்,

கப்பல்களையும் நிறுத்திவைத்துள்ளோம். ........ சைபீரியா, ஹங்கேரி மற்றும் பல்வேறுபட்ட இடங்களில் உள்ள நம்முடைய கப்பல்களிலும் அதே மாதிரியான ஏவுகணைகள் நிரப்பப்பட்டு, அங்கே நின்று கொண்டிருக்கின்றன.

47. சகோதரர்களே, அது நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலம் கடந்ததாகவே உள்ளது. சோதோம் கொமோராவினர் தங்களுடையக் கடைசி நேரத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தனர் என்பதை அன்றிரவும் அறியாமலிருந்தனர். முன்னறிவிக்கப்பட்டிருந்த சங்காரத் தூதன் வரவிருந்த அந்த இரவை

எகிப்தியர் அறியாதிருந்தனர். பியர்ல் துறைமுகம் என்ற இடத்தில் நடை பெற்ற அந்தத் தாக்குதலை அறியாதிருந்தோம். நாமோ தராசிலே நிறுத்தப்பட்டு குறையக்காணப்பட்டிருக்கிறோமே! நாம் முடிவு நேர நெருக்கத்தில் இருக்கிறோமே!

48. என்ன சம்பவிக்கும் ...... அவர்கள் சரியாக மாஸ்கோ விலிருந்து அந்த ஏவுகணைகளை வீசக்கூடுமானால், தொலை நிலை இயக்கமானியின் மூலம் இயக்கி, லூயிவில்லிலுள்ள நான்காம் தெருவிற்குச் சரியாக அந்த அணுகுண்டை அந்தத் தேசத்திற்கு வீசவேண்டும் என்று அவர்கள்

விரும்பினால் வீசலாம். அது உண்மை. நாம் எங்கோச் சமுத்திரத்தில் உள்ள நம்முடைய கப்பல்களில் நின்று மாஸ்கோவின் தலைநகரத்திற்கு நாம் ஏவுகணைகளை நேரடியாக எறியவேண்டுமானாலும் எறிய முடியும். என் சகோதரனே, அந்த மகத்தான ஏவுகணை நிலை குலைவை ஏற்படுத்துமானால் இந்தத் தேசம் ஓர் அதிர்வையே பெற்றுக்கொள்ளும். அதே நேரத்தில் நாமும் அவ்வாறு அதே காரியங்களின் மூலம் அப்புறத்தில் அவர்களை நிலைகுலையச் செய்து அதை அதிரச் செய்வதால் என்ன சம்பவிக்கும்? நாம் ஒரு சிறிய,

மிகச்சிறிய, மிகச்சிறிய மெல்லிய மேற்பரப்பினைக் கொண்ட பகுதியின் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பூமி யதிர்ச்சிகள் இப்பூமியைச் சுற்றி சுற்றி அரித்து அது ஒரு முட்டையின் மேலோட்டைப் போன்று காணப்படுகிறது. எனவே அது ஒரு முறை பெரிய அளவில் வெடிக்குமேயானால், இந்த எட்டாயிரம் மைல்கள் ஆழத்தில் உள்ள அடர்ந்த எரிமலைக் குழம்புகள் ஆகாயத்திற்கு பீறிட்டுத் தெறிக்கும். அப்பொழுது தேவன் என்ன சம்பவிக்கும் என்று கூறினாரோ சரியாக அதுவே சம்பவிக்கும்.

49. நாம் முடிவின் நேரத்தில் இருக்கிறோம். நாம் இங்கே தான் இருக்கிறோம். அதைத் தடுக்க வழியே கிடையாது. பிச்சையெடுக்கின்ற யாவுமே ... நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐசன்ஹோவர் அவர்களை நியமிக்கலாம். ஆனால் அது இதனை ஒருபோதும் தடுத்து நிறுத்தாது. இயேசு கிறிஸ்து இந்த நேரங்கள் வரும் என்று கூறினார். நாம் இங்குதான் இருக்கிறோம். அத்திமரம் தன்னுடையத் துளிரை விடுகிறது.

50. நீங்கள் லுக் (Look) என்ற பத்திரிக்கையை வாசிப்பீர்

களேயானால், எப்படி அவர்கள் பெரிய ஆகாய விமானங்களை ஈரானுக்குக் கொண்டுச் சென்று, அங்கிருந்து இந்த யூதர்களை கூட்டமாக ஏற்றிக்கொண்டு வந்தனர் என்பதை அப்புத்தகத்தில் உள்ள புகைப்படத்தில் காணலாம். அங்கே அவர்களில் ஆயிரக் கணக்கானோர் பாபிலோனுக்கு கொண்டுச் செல்லப்பட்டது முதற்கொண்டு இரண்டாயிரத்தைநூறு ஆண்டுகளாக அங்கேயே விடப்பட்டிருந்தனர். அவர்கள் மரத்தாலான பண்டைய கருவி களைக் கொண்டே உழுது கொண்டிருந்தனர். அவர்கள் இயேசுவானவர் பூமியின் மேலிருந்ததைக் குறித்தும்கூட

ஒன்றுமே அறியாதிருந்தனர். அவர்கள் தங்களுடைய பண்டைய யூத பாரம்பரியத்தைத் தவிர, அவர்கள் வாழ்ந்துவந்த பாரம்பரியங்களைத் தவிர வேறெந்த காரியத்தைக் குறித்தும் ஒன்றுமே அறியாதிருந்தனர். இந்த ஆகாய விமானங்கள் அங்கு கீழே சென்று அவர்களை தாய்நாட்டிற்கு திரும்பக் கொண்டு செல்லும்படி இந்த யூதர்களை ஏற்றத் துவங்கினபோதோ ......

51. தீர்க்கதரிசியோ, "அவர்கள் அந்த சிறையிருப்பிலிருந்து வெளியே வரும்போது,, தேவன் அவர்களைக் கழுகின் செட்டை களின் மேல் கொண்டு வருவார்"

என்று இரண்டாயிரத்து எண்ணூறு அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனம் உரைத்துள்ளான். அந்த தீர்க்கதரிசி ஆகாய விமானம் வருவதைக் கண்டான். அவன் அவர்கள் அதில் அமர்ந்திருப்பதையும், அது அவர்களை ஏற்றிக்கொண்டு மீண்டும் அவர்களைத் தாய்நாட்டிற்கே கொண்டுச் செல்வதையும் கண்டான். ஆனால் அதை என்னவென்று அழைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை . எனவே அவன் வெறுமனே .... அதுவே அவனுக்குக் கழுகைப்போன்று காணப்பட்டது. எனவே அவன், "அவர்கள் கழுகின்

செட்டைகளின் மேல் திரும்ப கொண்டு செல்லப்படுவார்கள்" என்றான்.

52. அவர்கள் அந்த ஆகாய விமானத்திலிருந்து இறங்கின போது, வாலிபர், வயோதிபர்களுக்கு உதவி செய்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்கள் நேர்முகப் பேட்டி காணப் பட்டனர். அப்பேட்டியாளர்கள், "நீங்கள் மரிக்கும்படியாக தாய் நாட்டிற்கு திரும்பி வந்திருக்கிறீர்களா? " என்று கேட்டனர்.

அதற்கு அவர்கள், "இல்லை நாங்கள் மேசியாவைக்

காணும்படிக்கே திரும்பி வந்துள்ளோம்” என்று பதிலுரைத்தனர்.

53. ஓ, பெரிதான நீராவிக்கப்பல்கள் கடந்த சில வருடங்களாக உலகத்தைச் சுற்றிலுமிருந்து, வாலிப மற்றும் வயோதிப யூதர்களையும் ஏற்றிக்கொண்டு வந்துள்ளன. அவர்கள் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் போது தங்களுடைய ஆடைகளையே அணிந்திருந்தனர். எருசலேமின் தலைநகரத்தின் மேல் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளாக பறக்காமலிருந்த உலகத்திலேயே மிகப்பழமையான

தாவீதின் ஆறு முனை நட்சத்திரக் கொடி பறக்க, அது இன்றிரவு ஒரு தேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திமரமானது தன்னுடைய துளிர்களை விட்டுக் கொண்டிருக்கிறது.

எருசலேம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கர்த்தர், திரும்ப அளித்துக் கொண்டிருக்கிறார். இவை தீர்க்கதரிசி முன்னுரைத்த அடையாளங்களாகும்; புறஜாதியாரின் நாட்கள் எண்ணப்பட்டு, பயங்கரங்களால் நிறைந்துள்ளன; ஓ, சிதறுண்டோரே, உங்களுடைய சொந்தத்திற்குத் திரும்புங்கள்.

மீட்பின் நாள் சமீபமாயிருக்கிறது. மனுஷருடைய இருதயங்கள் பயத்தால் சோர்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

*தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டு, உங்களுடைய தீவட்டிகளைச் சீர்ப்படுத்திச் சரிசெய்யுங்கள். மேல் நோக்கிப் பாருங்கள்! உங்களுடைய மீட்பு சமீபமாயிருக்கிறது.*

54. நாம் நினைப்பதைக் காட்டிலும் காலம் தாமதமாயுள்ளது. நாம் ஓர் இருக்கையை நிரப்ப சபைக்கு வருகிறதில்லை. நாம் ஒரு நல்ல பிரசங்கத்தைக் கேட்க சபைக்கு வருகிறதில்லை அல்லது நல்ல

இசையைக் கேட்க சபைக்கு வருகிறதில்லை. அவைகள் யாவுமே அவைகளினுடைய ஸ்தானத்தில் உள்ளன. ஆனால் நாம் தேவனோடு சரிசெய்து கொள்ளவும், நம்முடைய ஆத்துமாவினுடைய இரட்சிப்பிற்காக சபைக்கு வருவதே மேலானதாகும். ஏனென்றால் மீட்பின் நாள் சமீபமாயிருக்கிறது.

# மத்தேயு 24:2

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

---

## செய்தி: 54-01-03 M

# கேள்விகளும் பதில்களும்

## COD #2

---

9. சுவிசேஷமானது யூதர்களுக்கு திரும்புகையில் சபை எந்த நிலையில் இருக்கும்?

51. இப்பொழுது, இதை எழுதிய நபர், லூக்காவைக் குறிப்பிடுகிறார் ... அவர்-அவர் என்னிடம் கூறினார், நம்முடைய சகோதரன், "புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் மதில்கள் புறஜாதியாரால்

மிதிக்கப்படும்" என்று வேதம் கூறுவதை அவர் குறிப்பிடுகின்றார். அது லுக்கா 21:24. இதைக்கூர்ந்து கவனியுங்கள். இது விளங்கச் செய்யும். அருமையான கேள்வி! அற்புதமானது.

எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

52. இப்பொழுது, இதை நாம் கூர்ந்து கவனிப்போமாக. "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்று." இப்பொழுது,

இதைக் குறித்து அநேக குழப்பங்கள் உள்ளன. ஜனங்கள். - . ஆனால் வேதத்தைக் கொண்டு சரித்திரப்பூர்வமாக அதை நீங்கள் அணுகுங்கள்.

53. இப்பொழுது, ஏழாம் நாள் ஆசரிப்பு சகோதரர் எருசலேம் மறுபடியும் சேனைகளால் சூழப்படும் என்று விசுவாசிக்கிறார்கள். நல்லது. இப்பொழுது, அது உண்மையாக இருக்கலாம், ஏனெனில் வேத வசனமானது அநேக அர்த்தங்கள் கலந்து இணைந்ததாய் இருக்கின்றது.

54. வேதாகமம், ஒவ்வொரு தீர்க்கதரிசனத்திற்கும் அநேக அர்த்தங்களை கொண்டிருக்கிறது என்பதை உங்களில் எத்தனைப்பேர் அறிவீர்கள்? நிச்சயமாக! ஆம் ஐயா, அது அதைக் கூறி இந்த காலத்தைத்தான் அது குறித்துக் காட்டி, திரும்பவுமாக மறுபடியும் இங்கே உள்ள ஏதோ ஒன்றைக் குறித்து கூறும். பாருங்கள்? நான் சீக்கிரமாக சிந்திப்பேனானால் சிலவற்றை நான் குறித்துக் காட்டுவேன். ஓ, ஆம். இங்கே லூக்காவில் ஒன்றுள்ளது. , , மத்தேயு 2ல், "என்னுடைய , , எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன், என்று

கூறுகின்றபடி, தீர்க்கதரிசியினால் பேசப்பட்டது நிறைவேறும்படியாக, இயேசு எகிப் திலிருந்து வரவழைக்கப்பட்டார்", என்று கூறுகின்றது.

55. இப்பொழுது, அந்த தீர்க்கதரிசனம், தீர்ககதரிசியால் குறித்துக்காட்டப்பட்ட அது சரியாக இஸ்ரவேல் (தேவனுடைய குமாரன்) குறித்துக் காண்பிக்கின்றது. அவன் எகிப்திலிந்து வர வழைக்கப்பட்டான். ஆதியாகமத்திலும், யாத்திராகமத்திலும்அது சரி. ஆனால் அது- அங்கே குறிப்பிடப்பட்ட அது, மறுபடியும் இங்கே சொல்லப்படுகிறது. அவர்

பார்வோனிடம் “நீ..." என்றார். “நீ, - நீ ..." என்றார். அவன் அவருடைய குமாரனுக்கு என்ன செய்தான். - அவர் அந்த ஜீவனை அழிப்பேன் ... அவன் அவருடைய குமாரனை போகவிடவில்லை, ஆகவே பார்வோன் ... தேவன் பார்வோனின் குமாரனைச்சங்கரித்தார் ... அல்லது அந்த மரணதூதன் அதைச் செய்தான் ஆகவே அது அநேக அர்த்தங்களைக் கொண்டதாயுள்ளது.

56. ஆகவே, இப்பொழுது, எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருந்ததைக் குறித்து, நிஜமாகவும் சரித்திரப்பூர்வமாகவும், அது கி.பி.96 ஆம் வருடத்தில், தீத்து எருசலேமை முற்றுகையிட்டபோது

நிகழ்ந்தது. இப்பொழுது நீங்கள் கூர்ந்து கவனிப்பீர்களானால் வித்தியாசத்தைக் காணக்கூடும். கடைசி காலத்தில் எருசலேம் சேனைகளால் சூழப்படும் என்று விசுவாசிக்கிறேன். தீத்து அவர்களை முற்றுகையிட்ட பொழுது, அந்த அழிவு நடந்தபொழுது , , , இங்கே இது அதனுடன் ஒத்திருக்கின்றது என்று தான் நம்புகிறேன்.

57. இப்பொழுது, ""அந்த அழிவைக்குறித்து தீர்க்கதரிசி தானியேல் பேசும்பொழுது . . . "அது பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கையில்" என்று கூறுகிறான். கவனியுங்கள், அவள், " நீங்கள் பாழாக்கும் அருவருப்பை, பரிசுத்த

ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது" என்ற கூறுகின்றான். பாருங்கள், "அந்த அருவருப்பு" அருவருப்பு என்றால் "அசுத்தம்", "பாழாக்குதலைச் செய்கின்ற", பாழாக்குதல் என்றால் "அப்புறப்படுத்து" "அழித்தல்", "நீங்கள் பாழாக்கும் அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும் போது, "தீத்து எருசலேமை முற்றுகையிட்டபோது வேதபூர்வமாக நிறைவேறினது அதை எடுத்து

58. இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் "கடைசி காலம் எப்பொழுது இருக்கும்? கிறிஸ்துவின், , , வருகைக்கான

அடையாளங்கள் என்ன?" என்று அவர்கள் அவரிடத்தில் கேட்டனர். தேவாலயத்தைக் குறித்தும், அது எப்படி இருந்தது என்றும், எப்படி மகத்தான கற்களால் அது அலங்கரிக்கப்பட்ட தென்றும் அவர்கள் (சீஷர்கள் தமிழாக்கியோன்) அவரிடத்தில் கூறினர்.

59. அவர், "ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் வேளை வரும், எல்லாம் இடித்துப் போடப்படும்" என்று கூறினார். அவர் அவர்களுக்கு அற்புதங்களையும், அடையாளங்களையும் கொடுக்கத்

துவங்கினார். அப்பொழுது, இயேசு அவர்களிடையே பேசுகையில், தானியேலுக்கு திரும்புகிறார், ஏனெனில் எல்லா தீர்க்கதரிசனங்களும் ஒன்றோடு ஒன்றாக இணைந்து நிறைவேற வேண்டும். முழு வேத வாக்கியங்களும் எங்கேயும் தவறாததாய் உள்ளது.

60. இயேசு, ""வேத வசனங்கள் தவறாததாயிருக்கின்றன'', ஆமென். அங்கே. . . தான் பரலோகத்திற்குப் போகிறேனா? நிச்சயமாக தான் செல்கிறேன், வேதவசனங்கள் தவறாததாயிருக்கின்றன. அடையாளங்களையும் அற்புதங்களையும் விசுவாசிக்காத

உங்களுக்கு, எப்படி நீங்கள் வேத வசனத்திலிருந்து விலகியிருக்க முடியும்? வேதவசனங்கள் எவ்வாறு தவறத்தாயிருக்கின்றனவோ அவ்வாறே கிறிஸ்துவையும் (மேலே இருக்கின்ற) புறம்பாக்கிட முடியாது, எப்படி மேலே இருக்கிற அவருடைய மகத்தான ஒவ்வொரு அசைவும் கீழே பூமியிலே பிரதிபலிக்கிறதோ அதே போன்று, அது அவ்வாறு இருந்தாக வேண்டும். ஆகவே கிறிஸ்து, ... உங்கள் . . . தெய்வீக சுகமளித்தல், தேவனுடைய வல்லமையானது இங்கே பூமியிலுள்ள மாம்சப்பிரகாரமான அல்லது ஆவிக்குரிய சபையிலிருந்து

எடுக்கப்பட்டால், அது கிறிஸ்துவிலிருந்தும் நீக்கப்பட்டது போன்றதாகும். அவர் இன்னுமாய்...

61. ஆனால், ஓ, அந்த உண்மையான திராட்சைச் செடியைப் பற்றியும் கொடிகளாகிய நம்மைப் பற்றியும் என்ன ஒரு அருமையான காட்சி. பாருங்கள்? திராட்சைச்செடி எங்கே செல்கிறதோ அங்கே கொடிகளும் செல்லுகின்றன. அது சரியா? அவருடைய சரீரமானது அசைவுக்குள்ளும் வல்லமைக்குள்ளும் வருவது போன்று அவருடைய மகத்தான சரீரம், ஓ, அவருடைய மகத்தான இரத்தம் வடிகின்ற கரங்கள்,

விழுகின்ற கண்ணீர், இரத்தம் வடிகின்ற அவருடைய விலாக்கள், அடிக்கப்பட்ட அவருடைய முதுகு, இதைப் போன்று பூமியின் மேலே தேவனுக்கும் (பிதா) பூமியிலுள்ள அழிவுள்ள மானிடர்களுக்கும் நடுவே தொங்கிக் கொண்டு, பரிந்து பேசிக்கொண்டு அவர்களை நேசிக்கின்றாரே அது சபைக்குள் அளிக்கப்பட்டுள்ளது என்பது எவ்வளவு அழகான ஒன்றல்லவா!

62. "என்னுடைய கரங்களை இவ்வழியாய் அசைப்பேன்" என்று அவர் கூறுகையில், அவருடைய சரீரமானது அசைகின்றது. ''இங்கே சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'', அந்த சபை

சரியாக நேரே செல்வதை நீங்கள் காண்பீர்கள். ஏனென்றால் என் கையினுடைய நிழலானது கையுடனே செல்ல வேண்டும். ஆமென். அது சரியா? ஆமென். ஓ, என்னே, அதைக் குறித்து நான் நினைக்கையில், அங்கே அவர் இருக்கிறார், அவருடைய சரீரமானது அசைகின்றது, ''நீங்கள் உலகமெங்கும் போய், வல்லமையை பிரஸ்தாபித்துக் காட்டுங்கள்", காரியம் என்னவென்றால் நம்முடைய வேத கல்வி, போதகங்களை, இன்னும் காரியங்களை செய்வோமானால் நாம் மோசமாகத் தோல்வியுறுவோம், ஆனால்

இப்பொழுது தேவனுடைய கரமானது அசைந்து, அடையாளங்களும் அற்புதங்களும் நம் கண்ணெதிரில் தோன்றிக் கொண்டுள்ளன. ஏன், என்னே?

63. இயேசு அங்கே பிசாசுகளைத் துரத்தின போது கூறினார் ... இப்பொழுது ஒரு க்ஷணம் கேள்வியை விட்டு அகன்று செல்கிறோம். ஆனால் இயேசு பிசாசுகளைத் துரத்தும் போது, "உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்தினால் உங்கள் பிள்ளைகள் எதினால் அவைகளைத் துரத்துகிறார்கள்? நீங்கள் இதைவிட

சிறந்ததை உடையவர்களாய் வைத்திருந்தால், எங்களுக்கு - அதை காண்பியுங்கள், " என்றார். பாருங்கள்? ''நான் தேவனுடைய விரலி னாலே..." ஆமென். தேவனுடைய "விரலை"' குறித்து சற்று சிந்தியுங்கள். கிறிஸ்துவிற்கு மேலாக தேவன் இருக்கிறார்; சபைக்கு மேலாக கிறிஸ்து. அங்கே, பிதா, சில-சில காரியங்களைக் கூறுகிறார்; பிறகு தேவன், குமாரன் தம்முடைய கரத்தை அசைக்கின்றார், நிழல் அதைத் தொடர்கிறது? "நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்தினால் உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?"

64. கவனியுங்கள், நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஓ, பிசாசு உங்கள்மேல் எவ்வளவு பெரிய வியாதியையும் வருத்தத்தையும் கொண்டு வந்தாலும் பரவாயில்லை, அவைகளை அகற்ற அவருடைய விரல் ஒன்றே போதும். ஓ, என்னே! என்னே! அவைகளைப் பாருங்கள், அவைகள் மிகப் பெரிய, வலுவான தோள்களும் கரங்களும், தசைகளும் கொண்டுள்ளன. ஆனால் அவருடைய விரல் ஒவ்வொரு வியாதியையும் பிசாசுகளையும் வெளியேற்றுகிறது. பிசாசு எவ்வளவு சிறியதான ஒன்று!. அவர் தம்முடைய விரலைக் கொண்டு

அவனைத் துரத்தள்ளி விடுகிறார். "நான் தேவனுடைய விரலினாலே..."

65. இப்பொழுது, நான் உங்களுக்கு தேவனுடைய அன்பை நான் காண்பிக்கட்டும். ஆனால் ஒரு ஆடு தொலைந்த போதோ, அவர் தம்முடைய விரலை உபயோகிக்கவில்லை, அதைத் தம்முடைய தோள்களின் மீது கிடத்தினார். அவர் தம்முடைய முழுவதையும், கைகளையும் பிரயோகித்து ஆட்டை தம்முடைய தோளின் மீது வைத்தார். ஒரு மனிதனுடைய தோள்களும், முதுகும் ஒரு மனிதனின் மிகவும் பலங்கொண்டதும், வல்லமை கொண்டதுமான பாகங்களாகும்.

நீங்கள் அதை அறிவீர்கள். அவர் தம்முடைய கைத்தசைகள், தசைகளினால் அந்த முழு ஆட்டையும் தூக்கி தம் தோளின் மீது வைக்கிறார். ஆகவே அவர் ஒரு சிறிய, பழைய பிசாசை ஓட்ட தம் விரலைக்கொண்டு வருவதுபோன்று வரவில்லை, ஆனால் இங்கே தம்முடைய எல்லா தசைகளையும், கால் தசைகளையும், கை தசைகளையும் கொண்டு, வனாந்திரத்தில் சென்று, காணாமற்போன அந்த ஆட்டை எடுத்து தம் தோளின் மீது வைத்துக் கொள்கிறார். ஓ, என்னே! "நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்தினால் உங்கள்

பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்" ஓ, அல்லேலுயா! என்னே!

66. சரி, இப்பொழுது பொருளிற்கு வருவோம்:

எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது...

அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகவும்... வெளியே புறப்படவும்... நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள்...

எழுதியிருக்கிறபடியாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிகட்டும் நாட்கள் அவைகளே,

அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின் மேல் மிகுந்த இடுக்கணும் இந்த இனத்தின் மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

பட்டயக் கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதி களுக்குள்ளும் சிறைபட்டுப் போவார்கள்;

67. கவனியுங்கள். அதைக் குறிப்பாக எடுத்துக் காட்ட இங்கே வேத வாக்கியங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. முதலாவதாக, "பட்டயங்களின்கருக்கினாலே"

கடைசியாக வருவது அணுகுண்டு ஆகும். பாருங்கள்? ஆனால் இது பட்டயக்கருக்கினால் உண்டாகிறது, யூதர்கள் எல்லா நாடுகளுக்கும் சிறையாக்கிக் கொண்டு செல்லப்பட்டனர். அது அவ்விதம் மறுபடியும் இருக்காது, அவர்கள் கடைசி காலத்திற்காக பாலஸ்தீனாவில் ஒன்று சேர்க்கப்படுவார்கள். பாருங்கள்? இது கடந்து போன நாட்களைக் குறிக்கின்றது. அது சரித்திர பூர்வமாக அப்படியே நடந்தேறியது.

68. அவர்கள் எல்லா நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். வானத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு தேசத்திலும்

நீங்கள் யூதர்களைக் காணலாம். ஓ, ஒவ்வொரு தேசத்திலும், நீங்கள் சீனாவிற்குச் சென்றால் அங்கே யூதர்களைக் காணலாம். நீங்கள் ரஷ்யாவிற்குச் சென்றால் அங்கே யூதர்கள் இருப்பதைக் காணலாம். ஒவ்வொரு சிறு தீவுகளுக்கும் செல்லுங்கள், அங்கே யூதர்களைக் காணலாம். ஒவ்வொரு தேசத்திலும் சிதறடிக்கப்பட்டிருக்கிறீர்கள், அது என்ன? தேவனுடைய தீர்க்கதரிசனம் ஆகும். தேவன் அதை எத்தனித்தார். சகோதரரே, அந்த யூதர்கள்தான் தூரத்தைக் காட்டும் அடையாளக் கம்பங்கள் ஆவர். நீங்கள் அவர்களைக் காணும்போது. . .

69. அவர்கள் குருடாயிருந்து, கொண்டு செல்லப்பட்டனர் என்று எனக்குத் தெரியும். அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். நீயும் நானும் காணத்தக்கதாக அவர்கள் தேவனால் குருடாக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டனர். அது சரி. ஆனால் தீர்க்கதரிசன ஆவியைக் கொண்டும், வேதத்தைக் கொண்டும் நான் கூறுகிறேன், யூதன் வீட்டிற்கு திரும்பும் நேரம் வந்துவிட்டது. ஆம் ஐயா, அவர் ஹிட்லரின் இருதயத்தைக் கடினப்படுத்தி ஜெர்மனி தேசத்திலிருந்து அவர்களை விரட்டினார்; முசோலினியின் இருதயத்தைக் கடினப்படுத்தினார், ரஷ்யாவை

விட்டு அவர்களை விரட்டினார். அவர் அவர்களை வெளியே கொண்டு வர அந்நாட்களில் செய்தது போல அவர் அவர்களை எவ்விடத்திலிருந்தும் விரட்டிக் கொண்டிருக்கிறார். அவர்கள் வனாந்தரத்தில் சென்று அங்கே கடந்து செல்ல ஆயத்தமாயிருந்த போது, என்ன நிகழ்ந்தது? தேவன் மகத்தான வாதைகளையும் மற்ற காரியங்களையும் கொண்டு அந்த தேசத்தைச் சந்தித்தார். அவர், எசேக்கியேல் மற்றும் வெளிப்படுத்தல் 11ல் வருகின்ற இரண்டு ஒலிவமரங்களாகிய தமது இரண்டு ஊழியக்காரர் வருகையில் அவர் மறுபடியும் அதைச் செய்வார்.

அவர் அந்த அற்புதங்களையும் அடையாளங்களையும் மறுபடியும் செய்வார்.

70. வெளிப்படுத்தல் 11ல் வரும் அந்த இரண்டு சாட்சிகளைப் பாருங்கள், "என்னுடைய இரண்டு சாட்சிகளுக்கும் அதிகாரம் கொடுப்பேன், அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லி வருகிற நாட்களிலே வானத்தை அடைப்பார்கள். வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிப்பார்கள்." அவர்கள் கடைசி நாட்களில் வருகின்ற இரண்டு சாட்சிகள் ஆவர்.

71. "அது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு" என்கின்ற நவீன போதகம் எனக்குத் தெரியும். அது தவறு! அது தவறு!

72. இங்கே அந்த இரண்டு சாட்சிகள், சரியாக மோசேயும் எலியாவும் திரும்ப வருதல் ஆகும். நீங்கள் கவனியுங்கள், அவர்கள் ஒவ்வொருவரும். . , மோசே, அவன் மரித்தான், ஆனால் அவன் எங்கு சென்றான்? அவன் மறுபடியும் எழுந்திருக்க வேண்டும். எலியா மரணத்தைக் காணாமல் மறுரூபமாக்கப்பட்டான். அவன் மரிக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு மானிடனும் மரிக்க வேண்டும். ஆகவே அவன்

மறுபடியும் திரும்ப வர வேண்டும். ஆகவே அவர்கள்தான் அந்த இரண்டு சாட்சிகள் ஆவர்.

73. இப்பொழுது கவனியுங்கள்:

அவர்கள் ... பட்டயக் கருக்கினாலே விழுவார்கள் ... (24வது வசனம்) ... புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டு போவார்கள். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் ... (ஆமென்!) ... எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.

74. நமக்கு சிறிது காலம் மாத்திரமே உள்ளது என்பதை அறியும் போது, அது அதிர்ச்சியூட்டுகின்றதாய்

இருக்கிறதல்லவா? தேவன் அவ்வாறே கூறியுள்ளார்! நேபுகாத்நேச்சார் ராஜாவோடு புறஜாதியாரின் காலம் துவங்கியது. ஓ, என்ன குறிப்பிடத்தக்க ஒன்று! இந்தப்பொருளின்மேல் எவ்வளவு நேரமாகிலும் என்னால் செலவழிக்க முடியும், ஆனால் இன்னும் சில நிமிடங்கள் மட்டுமே உள்ளன! ஆனால் கவளியுங்கள், எல்லாரும் தங்கள் கேள்விக்கு பதில் பெற விரும்புகின்றனர். ஆனால் நாம் இதன் மேல் பேசுகையில், நாம் இதைக் குறித்து சிந்திப்போம், சரியாக இப்பொழுது அது நமக்கு மிகவும் தேவையான ஒன்றாய் உள்ளது,

75. கவனியுங்கள்! தேவன் யூத மக்களை நடத்தினார். அவர்கள் ஒரு தேசமாக இருக்கவில்லை, அவர்கள் ஒரு ஜனங்களாய் இருந்தனர். அவர்கள் வெளியே அழைக்கப்பட்ட ஒரு சபையாய் மாத்திரம் இருந்தனர். யூதர்களுக்குள் எப்போதுமே ஒரு ஸ்தாபனம் இருந்ததில்லை, அவர்கள் எப்போதுமே தேவனால் வழிநடத்தப் பட்டனர்.

76. ஆகவே அவர்கள் பிறகு அரசியல் ரீதியாகவும், தேச ரீதியாகவும் வரவிரும்பிய அவர்களுக்கு ... ஒரு ராஜா தேவைப்பட்டது. ஆகவே தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைக்

கொடுத்தார். ஆனால் அது கிரியை செய்யவில்லை. தேவன்தான் அவர்களுடைய ராஜா. தேவன்தான் நம்முடைய ராஜா, அது சரி, தேவன்தான் சபையினுடைய ராஜா.

77. இப்பொழுது, கவனியுங்கள். அவர்கள் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனிற்கு கொண்டு செல்லப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் பூமியிலுள்ள நாடுகளைப் போல போலியாக இருக்க விரும்பினர். இன்றைய சபை உலகத்திற்கு அது என்ன ஒரு அருமையான காட்சி. இன்றைக்கு சபை உலகத்தைப் போலியாக்கிக் காண்பிக்க முயன்று, தங்களுடைய வாழ்க்கையின் போக்கிலே

அப்படியே அடித்துச் செல்லப்படுகின்றனர். உலகம் ஜீவிக்கிறது போல சபையும் ஜீவிக்கிறது, அப்படியே செய்து கொண்டு, அப்படியே நடந்து கொண்டு எல்லாவற்றையும் செய்து கொண்டு, தான் சபையென்று கூறிக் கொண்டிருக்கிறது. நீ அதைச் செய்யக் கூடாது. இல்லை ஐயா. நீ யார் என்பதை உன் ஜீவியம் நிரூபிக்கிறது.

78. நீ யார் ... நான் துவக்கத்தில் கூறினது போன்று. நீ வேறெங்கேயோ என்னவாய் இருக்கிறாயோ அதைத்தான் நீ இங்கே பிரதிபலிக்கிறாய், உன்னுடைய, மேலே எங்கேயோ

உள்ள வானத்துக்குரிய சரீரம் (celestial body) எப்படியுள்ளதோ அல்லது பூமிக்குரிய சரீரம் (terrestrial body) எங்கோ எப்படி உள்ளதோ அதைத்தான் இங்கேயும் பிரதிபலிக்கிறாய். ஆவிக்குரிய தேசத்தில் என்னவாய் இருக்கிறாயோ அதே போன்றுதான் இங்கேயும் இருக்கிறாய். நீ ஆவிக்குரிய பிரதேசத்தில் கெட்ட சிந்தையுடையவனாய் இருந்தால் இங்கேயும் கெட்ட சிந்தையுடையவனாய் இருக்கிறாய். பகைமை எண்ணம், பொறாமை, சச்சரவு உள்ளம் போன்றவைகளை ஆவிக்குரிய இடத்தில் கொண்டிருப்பாயானால் அது

இங்கே திரும்பி பிரதிபலிக்கும். ஆனால் உன்னுடைய முழு உள்ளான காரியங்கள் அப்புறப்படுத்தப்பட்டு சுத்தமாக்கப் பட்டிருந்தால், அங்கே உனக்காக சுத்தமாக்கப்பட்ட ஒரு சரீரம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அது காண்பிக்கின்றது, அது இங்கே மாம்சத்திலே பிரதிபலிக்கின்றது. இதை நீ காண்கிறாயா? பாருங்கள், இங்கே இருக்கிறது. ''இந்த பூமிக்குரிய கூடாரமாகியநம்முடைய வீடு அழிந்துபோனாலும்நமக்காக ஒன்று ஏற்கெனவே காத்துக்கொண்டிருக்கின்றது."

பாருங்கள்?

79. இப்பொழுது, இந்தக் காலத்தில் இந்த கடைசி காலத்தில், எப்படி இந்த மாம்சீக ஒப்பனை செய்தல், கிறிஸ்தவ மதத்தை போலியாக்குதல் எல்லாம் கலந்து அப்போது நடந்தது போல ஒரு பெரிய பாபிலோனாகி உள்ளது. அவர்கள் பாபிலோனுக்குள் கொண்டு செல்லப்பட்டனர். அது சரியா? "கர்த்தருடைய தூதன் வந்து என் ஜனங்களே, 'பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்! என்று அழைத்தான்." என்று வேதம் கூறுகின்றது.

80. குழப்பம்! "நான் ஒரு பாப்டிஸ்ட், நான் ஒரு மெத்தோடிஸ்டு, நான் ஒரு

பிரஸ்பிடேரியன்" இது எல்லாம் குழப்பமே. அதில் இரட்சிப்பு என்பதே கிடையாது.

81. இப்பொழுது, பாப்டிஸ்டு மக்கள் இரட்சிப்பைப் பெறவில்லை, மெத்தோடிஸ்ட் மக்கள் இரட்சிப்பைப்பெறவில்லை என்று நான் கூறவில்லை. நான் அதைக் குறித்து பேசவில்லை. நான் சபையைக் குறித்தும் அதினுடைய அரசியல் வல்லமையைக் குறித்தும் நான் பேசுகிறேன். அது அரசியல். அரசியல் பூர்வமாகப் பேசினாலும், ஏனெனில் நீ மெதோடிஸ்டாக அல்லது பாப்டிஸ்டு அல்லது பிரஸ்பிடேரியன் அல்லது கத்தோலிக்கனாக இருப்பதால்

அதனுடன் செய்வதற்கு ஒன்றுமில்லை. தேவன் அதை அங்கிகரிப்பதில்லை. ஆகவே அது இன்றைக்கு பாபிலோனாக இருக்கிறது, தேவன் தமது சபையை, இருதயத்தில் சுத்தமுள்ளவர்களை, அவைகள் எல்லாவற்றையும் விட்டு வெளியேவர அழைக்கிறார், அதை தம்முடைய சபையாக்குகிறார். எவ்வளவு அழகான ஒன்று!

82. இப்பொழுது கவனியுங்கள், உங்களுக்கு அதிர்ச்சியூட்டும் காரியத்தை என்னால் கூற முடியும். ஆனால் அது... கவனியுங்கள், இப்பொழுது கவனியுங்கள். பாபிலோன் எப்படி. , . என்ன நடந்தது. பாபிலோனில்,

உண்மையாக தொழுது கொண்டவர்கள் மீது நிர்ப்பந்தம் கொண்டு வரப்பட்ட போது என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். அன்று சிறைபிடிக்கப்பட்டவர்களில், தேவனை உண்மையாக தொழுது கொண்டவர்களாகிய வெகு சிலரான ஷாத்ராக், மேஷாக் ஆபெத்நேகோ, தானியேல், தாங்கள் யார் என்றும், அவர்களுடைய உண்மையான சுவாபம் என்ன வென்றும் காண்பிக்கதேவன் அவர்களை அழைத்ததை நினைவில் கொள்ளுங்கள். ஒரு விக்கிரகத்தை வழிபட அவர்கள் நிர்பந்திக்கப்பட்டனர். அது சரியல்லவா? விக்கிரக ஆராதனை!

அவர்கள் விக்கிரகத்தை வணங்க நிர்ப்பந்தம் செய்யப்பட்டனர், ஒரு சொரூபத்திற்கு முன்பு தலை வணங்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் அப்படி செய்யவில்லை என்றால், அவர்கள் துன்புறுத்தப் பட்டனர்.

83. ஓ, தானியேலையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும் எடுத்து ஒன்றாக இணைத்து வேத வசனத்தின் மூலம் சபையும் வெளியே அழைக்கப்படுவதற்கு முன் அத்தகைய துன்புறுத்தல் அடைவாள் என்பதை காண்பித்தல் எவ்வளவு அழகான காட்சி யாக இருக்கிறது. அந்த விதமாகத்தான் புறஜாதி சபையானது உள்ளே

கொண்டு வரப்பட்டது. அந்த விதமாகவே புறஜாதி சபையும் வெளியே எடுக்கப்படும். எப்படி வருகின்றாளோ அவள் அவ்விதமாகவே செல்வாள்.

84. அவன் எப்படி அந்த சொரூபத்தைக் கண்டான் என்பதைச் கவனியுங்கள். ஆகவே, இப்பொழுது, நினைவில் கொள்ளுங்கள். அந்த சொரூபம். . . இப்பொழுது இது சொந்த இடம். கவனியுங்கள். நேபுகாத்நேச்சார் ராஜா செய்த சொரூபம், பரிசுத்த மனிதனாகிய தானியேலுடையது என நான் நம்புகிறேன். நீங்கள் கவனிப்பீர்களானால், நேபுகாத்நேச்சார் அரசன்

தானியேலை "பெல்தேஷாத்சார்" (அது அவனுடைய சொரூபமாயிருந்தது) என்று ஏற்கனவே அழைத்திருந்தான். அவன் ஒரு சொரூபத்தை உண்டாக்கினான். இந்த சிங்கக் கெபியில் தானியேலுக்கு பிறகு யாருமே போடப்படவில்லை. அவன் "தானியேலின் தேவனைத்தவிர, வேறே தேவர்களை யாரும் சேவிக்கக் கூடாது" என்றான், ஆகவே இந்த பரிசுத்த மனிதனின் சொரூபமாக அது இருந்திருக்கக் கூடும். அந்த மகத்தான சிலையை, எல்லாரும் வணங்க வேண்டியதாயிருந்தது.

85, ஆனால் சபையாகிய, ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ... தானியேல் தலைவனாய் இருந்தான், கிறிஸ்து சபைக்கு தலைவராய் இருக்கிறது போல,

86. ஆகவே அவர்கள் இந்த சொரூபத்திற்கு வணங்கி, அதை சேவிக்க வேண்டியதாய் இருந்தது. கவனியுங்கள்! நீங்கள் கவனிப்பீர்களானால், அந்த நேரங்களில் தானியேல் அமைதியாயிருந்தான், ஆமென்! ஓ, இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். தானியேல் அமைதியாயிருந்தான், அவர்களை. . . அவர்கள் தங்கள் சொந்த

தெரிந்தெடுத்தலை செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர்.

87. அந்த நாளில்... புறஜாதிகளின் சமயம் முடிவடையும் நேரத்தில், அங்கே ஒரு சொரூபம் இருக்கும், எல்லாரும் இந்த சொரூபத்தை வணங்கி, அதை தொழுது கொள்ள வேண்டும். அது எவ்வளவு பரிசுத்தமாய் இருந்தாலும் சரி, நீங்கள் ஒரு சொரூபத்தை தொழுது கொள்ளக்கூடாது (சொரூப - வழிபாடு).

88. இப்பொழுது கவனியுங்கள். ஓ, என்னே! கடைசி நேரத்தில், தானியேல் மறுபடியும் உள்ளே

வருகிறான். எவ்வளவு மகத்துவமானது! வைப்பாட்டிகளுடனும், மற்றவர்களுடனும் அந்த மகத்தான விருந்து நடக்க இருந்த அந்த இரவில் சுவற்றில் ஒரு கையுறுப்பு வந்து "மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்" என்று எழுதினது. அது அந்நிய பாஷையில் எழுதப்பட்டிருந்ததால், யாராலும் அதற்கு வியாக்கியானம் அளிக்க முடியவில்லை. யாருமே அதற்கு அர்த்தம் உரைக்க முடியவில்லை,

89. அவர்கள் சென்று சிறந்த ஞானிகளைக் கொண்டு வந்தனர்.

அவர்கள் "எங்களுக்குத் தெரியவில்லை'' என்று கூறினர்.

90. அவர்கள் சென்று அவர்களுடைய எல்லா குறி சொல்பவர்களையும், ஜோதிடக்காரர்களையும் அழைத்து வந்தனர், அவர்கள், ''எங்களுக்குத் தெரியவில்லை. அதைக் குறித்து எங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. இதைப் போன்ற ஒரு பாஷையை, மொழியை நாங்கள் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை '' என்றனர்.

91. ஆனால் அங்கே ஒரு மனிதன் இருந்தான்! தேவன் தம்முடைய மனிதனை

வைத்திருந்தார். தானியேல் அங்கே இருந்தான். அவன் - ''நீங்கள் சென்று அவனைக் கொண்டு வாருங்கள், ஏனெனில் தேவனுடைய ஆவி அவனுக்குள் வாசம் செய்கிறது" என்று கூறினான்.

92. ஆகவே தானியேல் அங்கே வந்து அந்த சுவற்றில் எழுதப்பட்ட அந்த பாஷையைப்படித்து அதை வியாக்கியானம் செய்கிறான். அவள், , , அதின் வியாக்கியானம் செய்கிறான். அவன். . .அதின் வியாக்கியானம் என்ன? "ஓ, நீர் ஆசீர்வதிக்கப்படுவீராக, ஓ ராஜாவே நீர் என்றும் வாழ்க'' என்றல்ல, ஆனால் நேரடியாக முரடான குரலில், அவன் நேரடியாக

நிராகரிக்கப்பட்டான் என்னும் விதத்தில், "நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறையக் காணப்பட்டாய்" என்றான்.

93. கவனியுங்கள், அது அதே விதமாகத்தான் இருக்கின்றது. இயற்கைக்கு மேம்பட்ட காரியம் எப்படி புறஜாதியாரின் ராஜ்ஜியத்தை உள்ளே கொண்டு வந்ததோ, அதே போன்று இயற்கைக்கு மேம்பட்ட காரியம் இதை புறஜாதியாரிடமிருந்து வெளியே எடுக்கிறது. இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் ராஜ்ஜியம் ஆரம்பித்து, இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் அது வெளியே செல்கிறது. எருசலேமின் மதில்கள் மேல்

அவர்கள். . . அது. . . "புறஜாதியாரின் காலம் நிறைவாகும் வரை புறஜாதியார் அதை கொண்டிருப்பார்கள்". பிறகு தேவன் யூதர்களிடம் திரும்புகிறார். ஆமென்! ஓ என்னே!

94. ஓ, நண்பர்களே, இதன்மேல் இன்னுமாய் சென்று கொண்டிருக்க நான் விரும்புகிறேன். நீங்களும்தானே? நாம் இந்த பொருளின் மேல் சுமார் ஒரு வாரம் நீடித்திருக்கலாம், பாருங்கள், வேத வசனங்களை நாம் முழுவதுமாக ஆராய நமக்கு ஏதுவாயிருக்கும்.

95. அதை, கவனியுங்கள், இப்பொழுது அவர் என்ன கூறினார்

என்று கூர்ந்து கவனியுங்கள், அவர் என்ன கூறினார், "புறஜாதிகளின் காலம் நிறைவேறும் வரை எருசலேம் புறஜாதிகளால் மிதிக்கப்படும்,'' தீத்து எருசலேமை முற்றுகையிட்ட பின்னர் அதைப் பிடித்தான். அவர், "பாழாக்கும் அருவருப்பை நீங்கள் காணும்போது?" என்றார்.

"ஆம்" "நல்லது, புறஜாதிகள் உள்ளே வந்த பிறகுதான்" "ஆம், எங்களுக்கு புரிகின்றது" என்று சீஷர்கள் கூறினார்கள்.

''இப்பொழுது, புறஜாதியார் இப்பொழுது தங்கள் அரசாங்கத்தை கொண்டிருக்கின்றனர்''

''நிச்சயமாக''

96. "எருசலேம் அப்பொழுது புறஜாதியாரின் அரசாங்கத்தின் கீழ் இருந்ததா?" ஆம், ஐயா! ரோமர்கள். அவர்கள் இன்னும் எருசலேமில் அரசாங்கத்தைக் கொண்டிருந்தனர். தானியேல் பேசின அந்த பாழாக்கும் அருவருப்பு அப்போதே ஆரம்பித்து விட்டது.

97. இப்பொழுது அவர், "காலமானது சமீபமாய் இருக்கிறது, ஏனெனில் அவர்கள் முகமதியர், புறஜாதியர், இந்த ஆலயத்தை அழித்துப்போட்டு, ஓமர் மசூதியை இந்த இடத்தில் கட்டுவார்கள், இதே இடத்தில் அது நிற்கப்போகிறது,

அது இங்கே நிற்கப் போகிறது." என்றார்.

98. புறஜாதி என்றால் "அவிசுவாசி" என்று பொருளாகும். அது சபை அல்ல, இப்பொழுது, அது புறஜாதி, பாருங்கள், அவிசுவாசி. இப்பொழுது, - புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரை அது அங்கே நிற்கும். புறஜாதிகளின் யுகம் முடிவடையும்போது அந்த மகத்தான பிரபு கடைசிக் காலத்தில் மக்களுக்காக நிற்பார் (அவர் கிறிஸ்து).

99. தானியேலில், "அவனிடத்தில் அவர் வந்தார்"

“அவருடைய சிரசின் மயிர் வெண்மையாய் இருந்தது” வெளிப்படுத்தின விசேஷம் 1ஆம் அதிகாரத்தில் நீங்கள் காண்பது போன்று. நியாயசங்கம் உட்கார்ந்தது, புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. எழுதப்பட்டவைகளின்படியே ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்படைத்தனர். கவனியுங்கள், புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. "அவள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர் வந்தார், ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்" அவருடன் பரிசுத்தவான்கள் வந்தனர். அது சரியா, அது தானியேலில் உள்ளது.

'புஸ்தகங்கள் திறக்கப்பட்டன', அதுதான் தானியேலில் உள்ளது. "புஸ்தகங்கள் திறக்கப்பட்டன', அதுதான் உன் ஜீவியத்தின் புஸ்தகமாகும். "ஒவ்வொரு மனிதனும்- இவ்விதம் நியாயந்தீர்க்கப்பட்டான். ""வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது'', அதுதான் ஜீவ புஸ்தமாகும். "ஒவ்வொரு மனிதனும் நியாயந் தீர்க்கப்பட்டான்",

100. இப்பொழுது கவனியுங்கள், அது மூன்றாக இருக்கின்றது என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இதை

நினைவில் கொள்ளவில்லையெனில் நிச்சயமாக நீங்கள் குழம்பிப் போவீர்கள். பூமியின் மேல் பிறந்த மக்களில் மூன்று வகையைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள்; ஆதியில் மூன்று வகையினர் இருந்தனர்; கடைசியிலும் மூன்று வகையினர் இருப்பர். என்ன...

101. அவரைத் தொழுது கொண்டிருக்கிற ஆயிரமாயிரம் பேர்களோடும் இயேசு திரும்பி வந்தார். அவர் கூறினதை நினைவில் வைத்திருக்கிறீர்களா, "உங்களில் ஒருவனுக்கு வழக்குண்டானால், வழக்காடும்படி அவள் . . . அந்தக்காரரிடத்தில் போகத்துணிகிற தென்ன? பரிசுத்தவான்கள்

உலகத்தை நீயாயந்தீர்ப்பார்கள் என்பதை அறியீர்களா?" பரிசுத்தவான்கள் பூமியை நியாயத்தீர்ப்பார்கள்! அல்லேலூயா! தான் அதை நினைக்கையில், என்னே! அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டவர்களுடன் அவர் வருவதையும், ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகு, மீட்பையும், காலங்கள்தோறும் மீட்கப்பட்டயாவரும் அவருடைய பிரசன்னத்தில் நிற்பதையும் காண்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன், என்னே! இரத்தத்தால் கழுவப்பட்ட மணவாட்டி!

102. நன்மக்களாய் இருப்பவர்கள் அல்ல, அவர்கள்

நிச்சயமாக முதலாம் உயிர்த்தெழுதலில் இருக்க மாட்டார்கள், வேதம், "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை," என்று கூறுகிறது. அது சரியல்லவா? அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள், ஆனால் பரிசுத்த ஆவியை பெறமறுத்தவர்கள்.

103. அந்நேரத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர் மாத்திரமே உள்ளே செல்வர். ஆயிரவருட அரசாட்சியில் தெரிந்து

கொள்ளப்பட்டவர் மாத்திரமே செல்வர். ஓ, அப்படியானால், சகோதரனே, என்ன விதமான மக்களாய் நாம் இருத்தல் வேண்டும்? நான் ஆயிர வருட அரசாட்சியில் முழுவதுமாக இருக்க விரும்புகிறேன்! நாம் நம்முடைய பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் புறம்பே தள்ளுவோமாக. ஒரு சகோதரன் ஏதோ ஒன்றைக் தவறாக கூறி, அல்லது இந்த விதமாக தவறாகச் செய்தால், நாம் அவருக்காக ஜெபித்து, தொடர்ந்து சென்று கொண்டே இருப்போம். உன்னுடைய ஒரே நோக்கமானது

தேவளை நோக்கியவாறே இருக்கட்டும். வேறுயாரும் சென்றடையவில்லையானாலும், நீ சென்றடை. ஏனென்றால் தெரிந்து கொள்ளப்பட்டவர் மாத்திரம் ஆயிர வருட அரசாட்சியில் முழுதூடாக ஜீவித்து, கிறிஸ்துவுடன் ஆயிரம் வருடம் ஜீவிக்க உள்ளே சென்று, மகிமையில் அவருடன் சென்று, திரும்பவும் வருவார்கள், பொல்லாங்கரின் உயிர்த்தெழுதல் நடை பெற்றவுடன், ஆயிர வருட அரசாட்சி ஆயிர வருட அரசாட்சி முடிவடைந்த பின்னர், –... அப்பொழுது கிறிஸ்து சபையுடன் மேலே செல்வார், ஆயிர வருட

கடைசியில் அவர் சபையுடன் திரும்ப வருவார்.

104. கிறிஸ்து மூன்று முறை வருகின்றார். முதலாவதாக, தமது சபையை மீட்க வந்தார். அது சரிதானே? இரண்டாவது முறையாக, தமது சபையை பெற்றுக் கொள்ள வருகிறார். மூன்றாவது முறையாக அவர் சபையுடன் வருகிறார். பாருங்கள்? அவளை மீட்க வருகிறார்; அவளை எடுத்துக் கொள்ள வருகிறார், வாதைகள் இன்னும் மற்ற காரியங்களின் நேரத்தில் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ள வருகிறார்; ஆயிர வருட அரசாட்சிக்காக திரும்பவும்

வருகிறார், ஆயிரம் வருடங்கள் முழுவதும் இருக்கின்றார்,

105. அதன்பின் அந்த மகத்தான ராஜாவும் ராணியும் நியாயத் தீர்க்க கீழே வருகின்றனர். வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு வைக்கப்பட்டு புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. அதோ அங்கே மீட்கப்பட்டவர்கள் அங்கு நின்று கொண்டிருக்கின்றனர். பரிசுத்த ஆவியினாலே பிறந்து ஜீவிக்கிற தேவனுடைய சபை அங்கே அந்த அழகுடன் நியாயத்தீர்க்க நின்று கொண்டிருக்கிறது, "புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, நியாயத்தீர்ப்பு வைக்கப்பட்டது, ஒவ்வொரு மனிதனும் இவ்வாறு

நியாயத்தீர்ப்படைந்தான்'' அதுதான் பாவிகள், "வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது". பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டுள்ள மணவாட்டிக்கு அல்ல, அவள் எடுக்கப்படுதலில் இருப்பதினால் அவள் அதில் இல்லை.

106. இந்த காலையில் நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டிருந்தால், தேவனுடைய வல்லமை உங்கள் சரீரத்தின் ஒவ்வொரு தசையிலும் அசைந்து கொண்டிருக்குமானால், நியாயத்தீர்ப்பின் நாளிலே எப்படிப்பட்ட நன்மையை அது உங்களுக்கு அளிக்கும்? நீங்கள் ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டு,

ஏற்றுக் கொள்ளப்பட்ட, நிறைக்கப்பட்டு, ஏற்கெனவே ஏற்கெனவே கிறிஸ்து இயேசுவுடன் உன்னதங்களுக்குள் அமர மாற்றப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அப்படி இருக்கப் போகிறீர்கள் என்பதல்ல, நீங்கள் இப்பொழுதே மாற்றப்பட்டிருக்கிறீர்கள், சரியாக இப்பொழுதே மாற்றப்பட்டு இருக்கிறீர்கள்!

107. "அவர் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார். ஆகவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின்

கீழ் இருந்து பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்ட, இவ்வுலகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு மீட்கப்பட்ட நபருக்கும் நித்திய ஜீவன் இருக்கின்றது. அவன் அழிந்து போக முடியாது, அவன் ஏற்கனவே கிறிஸ்து இயேசுவிற்குள் உன்னதங்களில் அமர்ந்திருக்கிறான், அவன் ஆக்கினைக்குள்ளாக வர முடியாது. அவன் ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளாள். அது அற்புதமானதல்லவா? பாருங்கள்? ஏற்கெனவே மீட்கப்பட்டு, கிறிஸ்துவுடனே உன்னதங்களில் அவர்கள் அமர்ந்திருக்கின்றனர். ஏற்கெனவே மகிமைப்படுத்தி

விட்டார், ஏற்கெனவே மகிமைப்படுத்தி விட்டார்.

108. “சகோ, பில், வேத வாக்கியம் அப்படி கூறுகின்றதா?" என்று நீங்கள் கேட்கலாம்.

109. இயேசு அதைக் கூறினார், அல்லது வேத வாக்கியம் அதைக் கூறுகிறது. அல்லது இதை எழுதின பவுல், எவர்களை நீதிமான்களாக்கினாரே, அவர்களை ஏற்கனவே மகிமைப்படுத்தியுமிருக்கிறார். அது என்ன? ஓ, என்னே! (என்னை மன்னியுங்கள்) ஏற்கெனவே மகிமைப் படுத்திவிட்டார்! அப்படியானால் நாம் பரிசுத்த

ஆவியினால் நிறைந்து, தம்முடைய தசைகளும், அவையவங்களும் தேவனுக்குள் காக்கப்பட்டு இருக்குமானால், இது நமக்கு முடிந்துபோய், நீ செல்லத்தக்கதாக ஒரு மகிமையின் சரீரம் ஏற்கனவே உனக்கு காத்துக் கொண்டிருக்கிறது. எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

110. நான் சிறிது நேரத்திற்கு முன் கூறினது போன்று, அதை உங்களுக்குத் தெளிவாகப் புரியும்படி செய்ய எனக்கு போதுமான கல்வியறிவு இருந்தால் நலமாயிருக்கும், போதுமான வகையில் கூற என்னால்

முடியவில்லை. நான் எதைக் குறித்து பேசுகிறேன் என்பதை அறிந்திருக்கிறேன், ஆனால் நான் கூற நினைக்கும் விதத்தில் அதைக் கூறிட என்னால் முடியவில்லை,

111. (ஒலிநாடாவில் காலி இடம் - ஆசி). சிவந்த சமுத்திரம்... யூதர்கள், செல்வம் மிகுந்தவர்கள் மற்றும் எல்லாக் காரியங்களையும் அங்கே வயல்களில் வெளியே போடுகின்றனர். ஆனால் அதே காரியம் அவர்களுடைய கூடாரத்தை மறுபடியும் மாசுபடுத்தும். ஆம்! உலகத்தின் பட்டணங்களினின்று அவர்கள் சரியாக வருவார்கள். ரஷ்யாவும் வந்து, "அந்த காரியத்தை நாம்

பெற்றாக வேண்டும். அங்கே யுரேனியம், மற்ற காரியங்களும் இருக்கின்றன. நாம் அதைப் பெற்றாக வேண்டும்'' என்று கூறுகிறது. அவர்கள் செல்கையில், அர்மெகதான் யுத்தம் நிகழும். அப்பொழுது தேவன் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலுக்காக நின்று யுத்தம் செய்தாரே அதைப் போன்றே செய்வார். ஆனால் அது புறஜாதியாரின் காலம் முடிந்தவுடன் நிகழும், காலமானது முடிவுற்றவுடன் அவள் அறுப்புண்டு போடப்படுவாள்.

112. (ஒலிநாடாவில் காலி இடம்) இப்பொழுது இந்த கேள்வியைக் கேட்ட அருமையான

நபருக்கு, இதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

# மத்தேயு 24:2

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 61-07-30M தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள் #1

---

107. நாம் இந்த நாட்களைப் பற்றி கண்டு கொண்டோமானால், அப்பொழுது, எப்பொழுது சகலவற்றின் முடிவும் இருக்கும் என்பதையும் கண்டு கொள்வோம். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? முடிவு பரியந்தமும் அது தீர்மானிக்கப் பட்டுள்ளது.

24ம் வசனம்... உன் ஜனத்தின் மேலும் உன் .... நகரத்தின் மேலும் (அதுதானே எருசலேமாகும்....

21வது - 24 வசனம் இங்கே இருக்கிறது. இயேசுவும் இதைப் பற்றி மத்தேயு 24ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்).

108. இப்பொழுது சகோதரர் காலின்ஸ் அவர்களே! - அவர் இக்காலையில் இங்கே இருப்பாரானால்... அவர் இங்கே இருக்கிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை - கேள்வி நேரத்தின் போது அவர் அன்றொரு நாள் ஒரு கேள்வியைக் கேட்டார். (சகோதரன் காலின்ஸ் என்று நான் அவரை அழைப்பது சரிதான் என்று நான் கருதுகிறேன்). பாழாக்கும் அருவருப்பு என்றால் என்ன அர்த்தம் என்பதே அவரது

கேள்வியாகும். (பார்த்தீர்களா?) இயேசு அதைப் பற்றி மத்தேயு 24 ம் அதிகாரத்தில் பேசினார் என்று நாம் பார்த்தோம். ஆம், மத்தேயு 24:15.

109. இப்பொழுது நான் அதை விரைவாக எடுத்துக்கொள்கிறேன். அப்பொழுது நீங்கள் தானியேலிருந்து குறிப்பிட்டுள்ள அதே காரியத்தைக் குறித்து, இயேசுவும் பேசுவதைக் காணலாம். குறிப்பெடுத்துக் கொள்கிறவர்களுக்காகக் கூறுகிறேன். மத்தேயு 24:15. நீங்கள் ஒவ்வொருவரும் விசேஷமாக இன்றிரவிலும், அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலும், பென்சில்களையும், தாள்களையும்

கொண்டு வருமாறு விரும்புகிறேன். ஏனெனில்... 24 ம் அதிகாரம் 15 வசனம் (மத்தேயு).

மேலும், பாழாக்கும் அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. (இது 486 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளதாகும்) தானியேல் தீர்க்கதரிசி... (வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்)... (உங்களுடைய வேதாகமத்தில் பாருங்கள் அது வளை அடைப்புக் குறிகளுக்குள் எழுதப்பட்டுள்ளது) ("வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்'' என்ற வாக்கியம் வளை அடைப்புக்குறிகளுக்குள் தான் ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்

தமிழில். அவ்வாறில்லை - தமிழாக்கியோன்).

110. இப்பொழுது அவர் யூதர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். ''இந்த ஆலயத்தைக் குறித்து என்ன? எப்பொழுது இது அழிக்கப்படும்? எப்பொழுது அது திரும்பக் கட்டப்படும்? ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி ஆக்கப்படும்? இதெல்லாம் எதுவரைக்கிலும் இருக்கும்?'' என்கிற விஷயங்களை யெல்லாம் அவர்கள் அறிய விரும்பினார்கள்.

111. "பாழாக்கும் அருவருப்பை அங்கே நீங்கள் நிற்கக்காணும்

போது..." தானியேல் பரிசுத்த ஸ்தலத்தில் நின்றிருந்த போது.... "இது வந்து நிறைவேறுவதை நீங்கள் காணும்போது தான் என்ன பேசுகிறோம் என்பதைப் பற்றி வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்..." என்று அவர் கூறினார். எனவே தான் நாம் தேவனிடம் சந்தேகத்தின் நிழல் ஒன்று கூட இல்லாதபடி அதை நமக்காக பரிபூரணமாக நிறைவானதாக ஆக்கித் தரும்படி ஜெபித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் அவ் விஷயங்களுக்கு நாம் நமது சொந்த வியாக்கியானத்தைப் போடக் கூடாது. கர்த்தர் உரைக்கிறதாவது என்னவென்றால்

என்பதன் மூலமாகத்தான் அது வரவேண்டும். எனவே, நான் அதை சரியாகப் புரிந்துகொள்ளுகிற வரையிலும் நான் அதை அங்கே தான் விட்டுவிடுகிறேன்.

112. அவனுக்கு யாவற்றையும் வெளிப்படுத்தினான். அந்த அருவருப்பானது... 'எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்'' என்ற தீர்க்கதரிசனத்திற்கு (ஓசியா 11:1) கூட்டு அர்த்தம் உள்ளது போல, இதுவும் உள்ளது. இஸ்ரவேல் மக்கள் வெளியே அழைக்கப்பட்டனர் (எகிப்தை விட்டு வெளியே வர - தமிழாக்கியோன்) அதே போல்

இயேசுவும் வரவழைக்கப்பட்டார் (எகிப்திலிருந்து வரழைக்கப்பட்டார் - தமிழாக்கியோன்) நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிஜமாயிருக்கிறதோ, அதே போல அவ்விஷயமும் சரியாக அப்படியே நிச்சயமாக நடக்கும். அவர் யாவற்றையும் மறைவாக ஆக்கி வைத்திருக்கிறார். அதை அவர் ஒரு வழியில் அவ்வாறு செய்திருக்கிறார். யாவற்றையும் சபை அறியாதபடி மறைத்து வைத்திருக்கிறார். ஓ, நாம் அந்த ஆறுவிதமான காரியங்களைப் பற்றி படிக்கப்போகிறோமே, அதற்குள் நாம் போகையில், அப்பொழுது, எவ்வாறு அவர் இதெல்லாவற்றையும் சபை

அறியாதபடி மறைத்து வைத்திருக்கிறார் என்பதை யும் அவ்வாறு அவர் செய்ததால், அவர் எப்போது வருவார் என்பதை சபை அறியாததால், சபையானது அசதியாயிராமல் விழிப்பாய் இருக்கட்டும் என்பதற்காக அவர் செய்தார் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இப்பொழுது, சபைக் காலம் முடிவடையப் போகிறது. ஆகவே, அது வருகைக்காக இப்பொழுது ஆயத்தமாயுள்ளது. அது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

113. வேதப் புஸ்தகத்தில் மிக மிக முக்கியமான வேத வாக்கிய மாக இந்த ஒரு வசனம் இருக்கிறது.

அது என்ன கூறுகிறது? அதுதானே யூத தேசத்தின் யூத மக்களின் காலத்தின் முடிவைப் பற்றி கூறுகிறது. இந்த வேதவாக்கியமானது, எழுபது வாரங்களைப்பற்றிய இவ்வேத வாக்கியங்களானது, தானியேல் ஆரம்பித்த அவ்வேளை துவங்கி, உலக முடிவின் காலம் முடிய உள்ளதைப் பற்றி வெளிப்படுத்தி, சரியாக அந்த நேரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. அது மகத்தான நேரங்காட்டிகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. ''அந்த வாரத்தின் கிழமை என்ன என்பதை அறிய வேண்டுமானால், காலண்டரைப் பாருங்கள்'' என்றும் "என்ன

காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிய வேண்டுமானால், யூதர்களைப் பாருங்கள்'' என்றும் நான் கூறுவதுண்டே, அதை எத்தனை பேர்கள் கேட்டிருக்கிறீர்கள்? அது சரிதான். இங்கிருந்து எடுக்கப்பட்ட தேவனுடைய காலண்டர் அங்கே இருக்கிறது. எந்தவொரு வேத விற்பன்னரும், வேத வல்லுனரும், எவரும் கூட யூதர்கள் தான் காலத்தைச் சுட்டிக் காட்டும் கடிகாரமாக இருக்கிறார்கள் என்பதைக் கூறிவிடுவர்.

இப்பொழுது என்ன சமயம் நமக்கு இருக்கிறது? நாம்... மக்கள்

உஷ்ணமடைந்துள்ளனர்... ஓ, நான்.....

114. புறஜாதிகளுக்கும் அதற்கும் சம்மதமேயில்லை. இந்த ஏழு முத்திரைகள், ஏழு வாதைகள், ஏழு ஆபத்துக்கள், ஏழு எக்காளங்கள் ஆகியவற்றுக்கு அவர்களோடு சம்மந்தமேயில்லை. புறஜாதி சபையாகிய நமக்கும் அதற்கும் சம்மந்தமேயில்லை. அது இஸ்ரவேல் மக்களைப் பற்றினதாக மட்டுமே இருக்கிறது. (எழுபது வாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் - தமிழாக்கி யோன்) ''தானியேலே உன் ஜனங்கள் மேலும், எருசலேமின் மேலும்'' என்று தான் சொல்லப்பட்டது.

115. இப்பொழுது, யூதர்கள் தங்களுடைய சுய தேசத்தில் வந்திருக்கும் போது மாத்திரமே தேவன் அவர்களோடு இடைபடுகிறார் என்ற உண்மைகளையும் இது தெரியப்படுத்துகிறது. அல்லேலூயா! அங்கே, சரியாக அங்கேதான் நான் மையப் பகுதியைப் போய் தொட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். தானியேலின் காலத்திலிருந்த இஸ்ரவேல் காலத்திலிருந்து அவர்கள் கணக்கிட்டு... ஒரு பெரிய எழுத்தாளர்... அவரைப் பின்பற்றுகிறவர்கள் சிலர் இங்கேயிருக்கிறார்கள், ஆகவே

நான் அதை கூறமாட்டேன். ஆனால் அக்காரணத்தினால் தான் அவர்களிடத்தில் தவறான விஷயங்களெல்லாம் உள்ளது.

116. ஏழாம் நாள் ஆசாரிப்பு சபையாக ஆவதற்கு முன்னால் அச்சபையார் மில்லர் என்பாரைப் பின்பற்றிக் கொண்டிருந்த போது, 1919-ல் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் தங்களுக்கு செட்டைகளை உண்டாக்கிக் கட்டிக் கொண்டு, அன்று ஒரு நாள் காலையில் பறக்கப்போகிறோம் என்று கூறி எழுந்தார்கள். அதைப் பற்றி நீங்கள் 'கூரியர்'' என்ற செய்தித்தாளில் பார்த்திருக்கிறீர்கள்.

அவர்கள் அந்த மில்லரைட்டுகள் அவர்கள் தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றி போதிப்பார்கள். பார்த்தீர்களா? சில காலத்திற்குப் பிறகு, அவர்களுடைய தீர்க்கதரிசினியாகக் கருதப்பட்ட திருமதி எல்லன் வொயிட் என்ற அம்மையாரால், தங்களை மாற்றியமைத்துக் கொண்டு தங்களைத் தானே செவன்த் டே அட்வெண்டிஸ்டுகள் (ஏழாம் நாள்காரர்கள் - தமிழாக்கியோன்) என்று அழைத்துக் கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய பெயரை, ''தீர்க்கதரிசனத்தின் சத்தம்'' என்று மாற்றிக் கொண்டு விட்டார்கள். ஒரே

விதமான மதக் கோட்பாட்டுக்கு மூன்று வெவ்வேறு பெயர்கள்.

117. இப்பொழுது, அவர்கள் தவறாயிருக்கிறார்கள். ஏனெனில், இந்த எழுபது வாரங்களை யூதர்கள், புறஜாதிகள் ஆகிய இருவருக்குமே சம்பந்தப்படுத்திப் போதிக்கிறார்கள். ஆனால் ஆண்டவரோ, இங்கே, 'அது உன் ஜனங்கள் மேல்..." என்று தான் குறிப்பிட்டுள்ளார் பாலஸ் தீனாவுக்கு வெளியே யூதர்கள் இருக்கையில் அவர்களோடு தேவன் இடைபடுவதேயில்லை. மேசியா 72வது வாரத்தில் மேசியா சங்கரிக்கப்பட்டார் (தமக்காக அல்ல, நமக்காக) அப்பொழுது இஸ்ரவேல் மக்கள் சிதறடிக்கப் பட்டார்கள்;

சமீபத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் தங்கள் சுயதேசத்திற்கு வந்தனர். அதுவரைக்கும் அவர்கள் ஒருக்காலும் திரும்பி வரவேயில்லை. ஆகவே அந்த இடைப்பட்ட காலமானது சபைக் காலத்தின் நிமித்தமாக அந்தக் கணக்கில் சேர்க்கப்படவேயில்லை நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? (சபையார் ''ஆமென்'' என்று கூறுகின்றனர்ஆசி) அது 1919ம் ஆண்டு அல்ல. ஒரு காரியம் 1919-இல் நடைபெற்றது என்பதைக் குறித்து நான் உங்களுக்கு காண்பிக்க முடியும். ஆனால் அதுதானே, அந்த மூன்றாவது தூதனின் செய்தியானது

உரைக்கப்பட்டபோது நடைபெற்றதாகும். அப்போது தான் சரியாக அந்த ஆபத்து' புறப்பட்டுச் சென்றது. ஆனால் அது அது அல்ல. .. யுத்தமானது மர்மமான முறையில் நின்று போன போதுதான் ஆகும். 7ம் அதிகாரத்திற்கு நாம் போகும் போது அதைக் குறித்துப் பார்க்கலாம். அத்தூதன், ''ஊழியக்காரராகிய யூதர்கள் முத்தியிரையிடப்பட்டுத் தீருமளவும் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருங்கள்'' என்று தன் செய்தியைக் கூறினான். அதைப் பற்றி நான் அநேக சமயங்களில் பிரசங்கிக்க நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அவர்கள்,

புறஜாதிகளின் காலமெல்லாம் முடிந்து கடந்து செல்லும் வரையிலும் காத்திருந்தார்கள். அதன் பிறகு அவர் வரும் பொழுது, 1,44,000 யூதர்களை முத்திரையிடுகிறார்; அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரத்தில் 1,44,000 பேர்கள் முத்திரையிடப்படு கின்றனர். நீங்கள் அதை படித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே, "நான் பார்த்த போது, இதோ, தேவனுக்கு முன்பாக சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக் காரரிலுமிருந்து வந்ததும் திரளான

கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கி தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு (யோவான் அவர்களைப் பார்த்தான்). அல்லேலூயா, ஆமென், மகிமையும் ஞானமும் கனமும் வல்லமையும் பெலனும் என்றென்றைக்கும் நமது தேவனுக்கே உண்டாவதாக; ஆமென்" என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள் (வெளி. 7:9-12).

118. யோவானால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவன் திரும்பி சீனாய் மலையின் மேல் (மகிமை!) ஸ்திரீகளால் (சபைகளால்) கறைப்படாத 1,44,000 பேர்களாகிய

யூதர்களைக் காண்கிறான். அவர்கள் லூத்தரன், மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியான் போன்ற எந்தவொரு ஸ்தாபனத்தையும் சார்ந்து கொள்ளவில்லை, ஆனால் அவர்கள் துவக்க முதலே யூதர்களாகவே இருந்து தங்கள் யூத ஆசார நெறிகளை வழுவாது காத்து வந்தவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய ஆலயத்தை சீனாய் மலையின் மேல் கொண்டிருந்து, அங்கே தொழுது கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் தான் அந்த 1,44,000. சபையானது மகிமையில் எடுத்துக்

கொள்ளப்பட்ட பிறகு அவர்கள் வருகிறார்கள்.

119. எனவே திரு. ஸ்மித் அவர்கள் தவறாயிருக்கிறார்கள். அவர் தவறாகத்தான் இருக்க வேண்டும்; ஏனெனில் இதை அவர் 1919இல் முடித்து அதிலிருந்து 1,44,000 பேர்களைப் பற்றிய காரியத்தை துவக்குகிறார். அப்படியானால் நீங்கள் ரஸ்ஸலைட்டு கள் போதனைகளுக்கு மீண்டும் வந்துவிடுகிறீர்கள். அது 1914 - இல் இயேசு வந்து, தமது சபையை 1919-இல் எடுத்துக் கொண்டு விட்டார் என்றும், இப்பொழுது, அவர் தாமே

கண்ணுக்குப்புலனாகாத ஒரு இரகசியமான சரீரத்தில் இருந்து கொண்டு பூமி முழுவதும் சுற்றி வந்து, ரஸ்ஸலைட்டு களாகயிருந்த தாத்தா, பாட்டிகளையெல்லாம் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழச் செய்து கொண்டு வருகிறார் என்கிறார்கள். சுத்த அபத்தம் இது! தேவனுடைய வார்த்தைக்கு பொருத்த மற்றதாக இது இருக்கிறது. அது சரியானதாக தோற்ற மளிக்காது. இல்லை, ஐயா, அது சரியாக இருக்காது.

120. ஆனால் தேவனிடத்திலிருந்து சத்தியம் இருக்கிறது. தேவன் ஒருவர்தான் அதை வெளிப்படுத்தி, அதை

சரியாக அதற்குரிய இடத்தில் வைத்து மிகச் சரியாக நமக்கு காண்பிக்க முடியும். அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். எனக்கு அது என்னவென்று தெரியாது. நான் உண்மையைச் சொல்லுகிறேன்.... எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசித்துக்கொண்டிருக்கிறேன்.

121. இதை நீங்கள் மனதில் கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் இதைக் காணுங்கள். இஸ்ரவேல் நாட்டிற்கு யூதர்கள் போகிற வரையிலும் தேவன் அவர்களோடு இடைபடவே மாட்டார்.

122. இஸ்ரவேலுக்குப் போவதைக் குறித்து பேசிக்கொண்டு இங்கே ஒரு சகோதரன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார், அவருக்கு நான் இதைத் தான் கூற முயற்சிக்கிறேன். இஸ்ரவேலை விட்டு விலகியிருங்கள்! யூதர்களை மனந்திரும்பச் செய்து குணப்படுத்த வேண்டும் என்று பேசுகிறவர்களே, நீங்கள் யாவரும் அவர்களை விட்டு அகன்று விடுங்கள். இந்த செய்தியானது முடிவடையும் முன்னர், ஒரே இராத்திரியில் வார்த்தையாலும் ஆவியாலும் இஸ்ரவேல் முழு ஜாதியாராக இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள்; இது கர்த்தர்

உரைக்கிறது என்னவென்றால் என்பதாக இருக்கிறது. வேதம் அவ்வாறே கூறுகிறது. ஆனால் சுவிசேஷமானது அவர்களுக்கு கூட இல்லை. அங்கே அவர்களுக்குள் சில மதம் மாறுபவர்கள் யூத சமயத்தை விட்டு வெளியேறி வந்து இரட்சிக்கப்படுகிறார்கள். அது உண்மைதான். என் முழு இருதயத்தோடு நான் அதை விசுவாசிக்கிறேன். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; இஸ்ரவேல்; தங்கள் சுயதேசத்தை விட்டு வெளியேறியிருக்கையில், அவர்கள் இரட்சிக்கப்படுவதேயில்லை.

இப்பொழுது அவர்கள் தங்கள் தேசத்திற்கு

திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளிலே முழு தேசமாக அவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள், வேதம் அவ்வாறு கூறுகிறது. ஒரு நாளானது இஸ்ரவேலர் எல்லோரையும் முழுவதுமாக தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வரும். அப்படிப்பட்டதான மகத்தான காரியம் இந்நாட்களில் ஒன்றில் இஸ்ரவேலை சந்திக்கும். அது அத்தேசம் முழுமையையும் அசைக்கும். ''ஒரே நாளில் நீர் இதைச் செய்தீர்'' என்று தீர்க்கதரிசி முழக்கமிட்டான். ஒரே நாளில் அவர்கள் அதைக் காண்பார்கள்.

123. மகத்துவமுள்ள காரியம் அங்கே உண்டாயிருக்கும். எனது

கருத்து என்னவெனில், அவர்களுக்கென ஒரு மகத்தான தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு முன்பாக எழும்பி நின்று, மேசியா இன்னும் ஜீவிக்கிறார் என்றும் அவர்கள் புறக்கணித்த மேசியா வந்திருக்கிறார் என்று நிரூபிப்பான். ஏனெனில்...

124. அவர்கள் இப்பொழுது இஸ்ரவேல் பைபிள் என்ற அந்த சிறிய வேதாகமத்திலிருந்து வாசித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அதை பின்னாலிருந்து முன் நோக்கி வாசிக்கிறவர்கள், அது யூத மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வார்கள் என்பதை நீங்கள்

அறிவீர்கள். லேவி பெத்ரூஸ் என்பவர் அவர்களுக்கு 10 லட்சம் வேதாகமங்களை அனுப்பி வைத்தார். அவர்கள் அதைப் படித்து விட்டு, "இந்த இயேசுவானவர்..." அந்த யூதர்களெல்லாம் ஈரான் நாட்டிலிருந்து அங்கே கொண்டு வரப்பட்டவர்களாகும். அவர்கள் மேசியா என்றொரு காரியத்தைக் குறித்தே ஒருபோதும் கேள்விப்பட்டிராதவர்கள் ஆவர். அவர்கள் தங்கள் சுயதேசத்திற்கு புறப்பட ஆயத்தமாகையில், அவர்களுக்கென வந்த ஆகாய விமானங்களில் ஏற மறுத்து விட்டனர். அவர்கள் இன்னமும் பழைய கலப்பையை வைத்துத் தான்

உழுது கொண்டிருந்தனர். அதைப் பற்றி 'லுக்'' என்ற பத்திரிக்கையில் படித்திருக்கிறீர்கள். எத்தனை பேர்கள் அதைப் பற்றிய கட்டுரைகளை 'லுக்' (Look) 'டைம்' (Time) ஆகிய பத்திரிகைகளில் படித்தீர்கள்? அவர்கள் விமானங்களில் ஏற மாட்டோம் என்றார்கள். அந்த வயது சென்ற அவர்களுடைய ரபீ அங்கே நின்று, "நாம் நம்முடைய சுயதேசத்திற்கு கழுகின் செட்டைகளில் கொண்டு செல்லப்படுவோம் என்று நம்மு டைய தீர்க்கதரிசி கூறுயிருக்கிறதை நினைவில் கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேல் விழித்தெழுகிறது வேதம் முன்னுரைத்த அடையாளங்கள் இவைகள் புறஜாதி நாட்கள் எண்ணப்படுகின்றன அச்சங்கள் நிரம்பியுள்ளன சிதறியவரே உமக்குச் சொந்தமானதிற்கு திரும்பிடுவீர்

125. நீங்கள் விழித்துக்கொண்டுவிடுவது நல்லது. நீங்கள் அதைப்பற்றி திரும்ப திரும்ப திரும்பக் கேட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்; ஆனால் இந்நாட்களில் ஒன்றில் இனிமேல் கேட்க முடியாதபடி அது கடைசி வேளையாக இருக்கப்போகிறது.

# Psalm 32:8

8. I will instruct thee and teach thee in the way which thou shalt go: I will guide thee with mine eye.

## சங்கீதம் 32:8

8. நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.



# மத்தேயு 24

## வியாக்கியானம்

1



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்களிலிருந்து